## (எ) அரசாங்க நிதி

### 1961-62ம் நிதி ஆண்டு

இலங்கை அரசாங்கத்தின் 1961-62ம் நிதியாண்டிற்கான கணக்குகளை, அட்டவணை II எ-1 சுருக்கமாக, முந்தைய ஆண்டுகளுக்கான கணக்கு விபரங்களுடன் ஒப்பிட்டுக் காட்டுகின்றது. இவ் அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளபடி, அரசாங்க வரவு செலவுத்திட்ட இயக்கங்களின் அம்சங்கள் பின்வருமாறு:—

(அ) 1959-60ம் ஆண்டில் ரூபா 14038 இலட்சமாகவும், 1960-61ல் ரூபா 15139 இலட்சமாகவும் விளங்கிய மொத்த அரசிறையுடன் ஒப்பிடுகையில், 1961-62ம் ஆண்டிற்கான மொத்த அரசிறை ரூபா 16253 இலட்சமாக(1) உள்ளது.

(ஆ) வாக்களிக்கப்பட்ட மொத்தச் செலவு(2) 1959-60ல் ரூபா 18200 இலட்சமாகவும், 1960-61ல் ரூபா 19622 இலட்சமாகவும் விளங்கியதற்கெதிராக, 1961-62ல் அது ரூபா 20676 இலட்சமாக விளங்கிற்று. இவ் எண்தொகைகள், ஆழ்நிதிக்கு உதவிய தொகைகளையும் அரசிறையிலிருந்து நேரடியாகத் திருப்பிக் கொடுத்து மீளப்பட்ட பொதுப்படு கடனையும், ஏட்டுச் சீரமைப்புகளையும் தவிர்ந்தனவாகும்(3). 1959-60ம் ஆண்டிற்கான எண்தொகைகளுள், மகா வங்கியிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு விசேடக் கடன் மூலம் சர்வதேச நாணய நிதிக்கு இறுக்கப்பட்ட ரூபா 370 இலட்சம் கொண்ட கட்டுப்பணப் பங்கும், நீக்கப்பட்டுள்ளது.

(இ) முற்பணக் கணக்கு இயக்கங்களின் விளைவாக 1959-60ல் ரூபா 13 இலட்சமும், 1960-61ல் ரூபா 142 இலட்சமும் கொண்ட நிகரக் கொடுப்பனவுகள் ஏற்பட்டன. 1961-62ல் இவ் இயக்கங்களின் விளைவாக, ரூபா 146 இலட்சம் கொண்ட நிகரக் கொடுப்பனவு ஏற்பட்டது.

(ஈ) இந்த இயக்கங்களின் நிகர விளைவாக 1959-60ல் ரூபா 4175 இலட்சம் கொண்ட பணக்குறையும், 1960-61ல் ரூபா 4625 இலட்சம் கொண்ட பணக்குறையும் ஏற்பட்டதற்கெதிராக, 1961-62ல், ரூபா 4569 இலட்சம் கொண்ட பணக்குறை ஏற்பட்டது.

1961-62ல் உண்மையாக ஏற்பட்ட நிகரப் பணக்குறையான ரூபா 4569 இலட்சம், இவ் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தின் மூல மதிப்பீடுகளில் உத்தேசிக்கப்பட்ட நிகர பணக்குறையான ரூபா 2805 இலட்சத்திலும் பார்க்க(4), ரூபா 1764 இலட்சத்தால் மேலதிகமாக உள்ளது. 1960-61ம்

---

(1) இவ் எண்தொகைக்கும், அரசாங்கக் கணக்குகளிற் பிரசுரிக்கப்பட்ட எண் தொகைக்கும் வித்தியாசம் உண்டு. ஏனெனில், தேசிய வெள்ள நிவாரண நிதியிலிருந்து அரசிறைக்கு மாற்றிப் பதியப்பட்ட ரூபா 206 இலட்சம் இங்கு நீக்கப்பட்டமையாலும், தேசிய அபிவிருத்தி வரியினுற் கிடைத்து அரசாங்கக் கணக்குகளில், விசேட நிதிக்கணக்கில், வரவு எனக் கொள்ளப்பட்ட ரூபா 186 இலட்சம் இங்கு சேர்க்கப்பட்டமையாலும் என்க.

(2) வாக்களிக்கப்பட்ட செலவு என்பதில், அந்நிய கடன்களும், நன்கொடைகளிலிருந்து ஈடு செய்யப்படும் சகல செலவுகளும் அடங்கும். கடந்த ஆண்டுகளில் அந்நிய நன்கொடைகளிலிருந்து, பிரதானமாகக் கொழும்புத்திட்டம், அமெரிக்க உதவி ஆகியவற்றிலிருந்து, நிதியீட்டப்பட்ட செலவுகளை, "வரவு செலவுத் திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவுகள்" எனக் கொள்ளப்பட்டது.

(3) அட்டவணை II எ-1 ன் அடிக்குறிப்பைக் காண்க.

(4) 1961-62ம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டப் பேச்சில் அறிவிக்கப்பட்ட பணக்குறை ரூபா 3400 இலட்சமாக உள்ளது. குழுநிலையின் போது பாராளுமன்றம் செய்த திருத்தங்கள் உட்பட பாராளுமன்றத்தினுல் அங்கீகரிக்கப்பட்ட, மூலவரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளில் ரூபா 3294 இலட்சம் கொண்ட பணக்குறை அனுமதிக்கப்பட்டது. இத்தொகையிலிருந்து, ஆழ்நிதிக்கு உதவுவதற்கும் அந்நிய கடன்களை மீள்வதற்கும் என மதிப்பிடப்பட்ட தொகையான ரூபா 489 இலட்சத்தை நீக்கியே, நிகரப்பணக்குறையாகிய ரூபா 2803 இலட்சம் கொண்ட மதிப்பீடு கணிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை II எ-1

அரசாங்க நிகரப்பணி

| | 1951-52 | 1952-53 | 1953-54 |
|---|---|---|---|
| 1. நிகரப்பணமிகை/குறை (—) .. .. .. | – 257·1 | – 231·9 | 33·7 |
| (அ) அரசிறை .. .. .. .. | 954·0 | 952·5 | 1,026·2 |
| (ஆ) செலவு (அதாவது கடன் வாங்குதல், கடன் கொடுத்தல் இயக்கங்களின் பேரில் ஏற்பட்ட நிகர வரவுகளை அல்லது கொடுப்பனவுகளைத் தவிர்த்த மொத்தக் கொடுப்பனவுகள்) .. | –1,211·1 | – 1,184.4 | – 992·5 |
| (i) ஆழ்நிதிக்கு வழங்கிய உதவு தொகையையும், அரசிறையிலிருந்து நேரடியாகத் திருப்பிக் கொடுக்கப்பட்ட பொதுப்படு கடனையும் தவிர்த்து மீண்டும் எழும் செலவு (2 (ஆ) (i) விடயம் பார்க்க)* .. .. .. | –1,004·6 | – 893·5 | – 772·0 |
| (உணவு மான்யம்) .. .. | (247.8) | –(127.0) | (12.0) |
| (ii) மூலதனச் செலவு* .. .. | – 203·0 | – 220·6 | – 162·3 |
| (iii) தேசிய அபிவிருத்தி ஒதுக்குநிதியால் அடைக்கப்படும் செலவு .. | – 7·7 | – 6·4 | 3·2 |
| (iv) களஞ்சியங்கள், பொருட்கள் ஆகியனவற்றின் கணக்கிற்குக் கொடுக்கப்பட்ட முற்பணங்கள் .. | – 16·8 | – 2·4 | 4·6 |
| (v) இதர முற்பணங்கள்* .. .. | 19·0 | – 52·8 | – 61·1 |
| (vi) ஏனையவை .. .. .. | 2·0 | – 8·7 | 1·5 |
| குறை நிவர்த்திக்கு நிதியீட்டுதல் | | | |
| 2. அரசாங்கக் கடன்பாட்டு அல்லது கடன் கொடுப்பனவு இயக்கங்களின் விளைவாக ஏற்பட்ட நிகரப் பண வரவுகள் அல்லது கொடுப்பனவுகள் (—).. | 184·1 | 216·5 | – 35.3 |
| (அ) நிர்வாகக் கடன்பாடும், திருப்பிக் கொடுக்கப்பட்ட கடன்களும் (சில்லரைக் கடன்களும் உட்பட) .. .. .. | – 34·2 | 11·9 | – 4·6 |
| (i) கட்டுப்பணங்கள் (வழக்குத் தொடர்வோர், ஒப்பந்தக்காரர் முதலியவர்களிடமிருந்து வந்தவையும், அந்நியநாட்டு உதவிகளில் செலவு செய்யப்படாத மீதிகளும்) .. .. .. | – 16·2 | 21·4 | – 2·1 |
| (ii) இதர பல வகை நிதிகள் (விதவைகள், அனதைகள் உபகாரச் சம்பளநிதி, அரசாங்க சேவையாளர் சேமநிதி முதலியன) .. .. | – 0·6 | – 0·2 | 0·3 |
| (iii) சில்லறைக் கடன்கள் (கமத்தொழில், கைத்தொழில் நாணய கூட்டுத்தாபனம், உள்நாட்டு அபிவிருத்திக் கடன்நிதி, உள்ளூர் ஆட்சிச்சபைகள் ஆகியனவற்றிற்குக் கொடுத்தவை) .. .. | 18·6 | – 9·3 | – 2·8 |
| (ஆ) உள்நாட்டுச் சந்தைக்கடன்பாடும், திருப்பிக் கொடுக்கப்பட்டனவும் .. .. | 218·3 | 204·6 | – 94·0 |
| (i) ரூபாய்க்கடன்கள் .. .. | 102·4 | 80·0 | 70·0 |
| ஆழ்நிதிக்கு வழங்கிய உதவு தொகையும், அரசிறையிலிருந்து நேரடியாகத் திருப்பிக் கொடுக்கப்பட்ட பொதுப்படுகடனும் (கழிய) | 18.4 | 23·1 | 22·6 |
| மீதி .. .. .. .. | 84·0 | 56·9 | 47·4 |
| (ii) இறைசேரி உண்டியல்கள் .. | 62·3 | 90·6 | – 78·1 |
| (iii) மகாவங்கி வழங்கிய முற்பணங்கள்.. | 72·0 | – 1·5 | – 4·7 |
| (iv) வரிப்பண ஒதுக்குநிதிப் பத்திரங்கள் .. .. .. .. | — | — | — |
| (v) இதர† .. .. .. | — | 58·6 | 58·6 |
| (இ) அந்நியக் கடன்பாடு .. .. .. | — | — | 63·3 |
| (i) கடன்கள் .. .. .. | — | — | 63·3 |
| திருப்பிக் கொடுக்கப்பட்டவை நீக்கி .. .. .. | — | — | 63·3 |
| (ii) நன்கொடைகள் .. .. | — | — | — |
| 3. (உடனடியாகத் தேறக்கூடிய சொத்துக்களும் உட்பட) பணமீதங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் .. | – 73·0 | – 15·4 | – 1·6 |

**மிகை/குறை (—)**

பத்து இலட்சம் ரூபாய்கள்

| 1954-55 | 1955-56 | 1956-57 | 1957-58 | 1958-59 | 1959-60 | 1960-61(இ) | 1961-62(ஈ) |
|---|---|---|---|---|---|---|---|
| **127·6** | **– 1·2** | **– 196·4** | **– 222·3** | **– 413·4** | **– 417·5** | **– 462·5** | **– 456·9** |
| **1,158·6** | **1,257·2** | **1,260·5** | **1,280·0** | **1,330·4** | **1,403·8** | **1,513·9** | **1,625.3(உ)** |
| **– 1,031·0** | **– 1,258·4** | **– 1,456·9** | **– 1,502·3** | **– 1,743·8** | **– 1,821·3** | **– 1,976·4** | **–2,082·2** |
| – 864·9(அ) | – 1,014·4 | – 1,105·2 | – 1,280·1 | – 1,432·2 | –1,511·9(ஆ) | – 1,540·8 | – 1,581·0 |
| **(36.0)(அ)** | **(79.5)** | **(105.5)** | **(112.0)** | **(146.5)** | **(193.0)** | **(248.0)** | (235·4) |
| – 215·5(அ) | – 211·0 | – 213·3 | – 282·6 | – 303·4 | – 306·6 | – 419·9 | – 485·9 |
| – 2·1 | – 4·0 | – 5·1 | – 3·0 | – 2·4 | – 1·5 | – 1·5 | – 0·7 |
| 9·9 | 1·2 | – 14·5 | — | 10·5 | – 7·1 | 1·9 | 2·4 |
| 34·0 | – 30·3 | – 115·8 | 54·5 | – 17·1 | 5·8 | – 15·9 | – 15·8 |
| 7·6 | 0·1 | 3·0 | 8·9 | 0·8 | — | – 0·2 | – 1·2 |
| **– 39·0** | **12·2** | **175·4** | **174·7** | **351·8** | **411·6** | **462·5** | **497·1** |
| **29·1** | **– 36·5** | **– 9·4** | **72·5** | **27·6** | **57·4** | **29·4** | **104·5** |
| 34·5 | – 10·8 | 9·0 | 73·9 | 27·3 | 62·3 | 36·5 | 98·4 |
| – 0·9 | – 4·8 | – 2·3 | 20·1 | 4·2 | 2·7 | – 1·0 | 4·8 |
| – 4·5 | – 20·9 | – 16·1 | – 21·5 | – 3·9 | – 7·6 | – 6·1 | 1·3 |
| **– 80·2** | **43·5** | **166·2** | **78·5** | **291·2** | **327·6** | **406·5** | **334·4** |
| 75·0 | 74·5 | 94·9 | 45·0 | 95·0 | 134·8 | 214·9 | 145·0 |
| **44·5** | **39·0** | **31·1** | **26·5** | **29·7** | 30·6 | 32·1 | 39·5 |
| 30·5 | 35·5 | 63·8 | 18·5 | 65·3 | 104·2 | 182·8 | 105·5 |
| – 44·9 | 8·0 | – 3·0 | 74·6 | 179·0 | 228·2 | 198·4 | 248·0 |
| – 65·8 | — | 96·3 | – 13·8 | 41·1 | 3·1(ஆ) | 20·6(ஆ) | – 21·0 |
| — | — | 9·1 | – 0·8 | 5·8 | – 7·9 | 4·7 | 1·9 |
| — | — | — | — | — | — | — | — |
| **12·1** | **5·2** | **18·6** | **23·7** | **33·0** | **26·6** | **26·6** | **58·2** |
| 12·1 | 5·2 | 18·6 | 23·7 | 35·5 | 29·3 | 16·3 | 44·5 |
| — | — | — | — | 2·5 | 2.7 | 3·0 | 5·3 |
| | | | | | — | — | |
| 12·1 | 5·2 | 18·6 | 23·7 | 33·0 | 26·6 | 13·3 | 39·2 |
| — | — | — | — | — | — | 13·3 | 19·0 |
| **88·6** | **11·0** | **– 21·0** | **– 47·5** | **– 61·7** | **– 6·0** | ... | **40·2** |

மூலம்: இலங்கை மகா வங்கி.

*1960-61 வரவு செலவுத்திட்டம் தொடக்கம், ''அரசிறையால் அடைக்கப்படும் செலவு'', எனவும் ''கடன் நிதியால் அடைக்கப்படும் செலவு'' எனவும், செலவைப் பாகுபடுத்தும் முறை கைவிடப்பட்டது. அதற்குப் பதிலாக அரசாங்கத்தின் மொத்தச் செலவு நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை, சொந்த வரும்படிகள், நிர்வாகச் செலவுகள், திணைக்களங்களின் சேவைகள், பொருளாதார அபிவிருத்தி முதலியன ஆகும். கடைசியாகக் கூறப்பட்ட மூன்று பகுதிகள் ஒவ்வொன்றும், மீண்டெழும் செலவு, மூலதனச் செலவு என மேலும் பிரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அரசாங்கத்தின் மொத்தச் செலவு ஏழு வாக்களிப்புக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த அட்டவணையில் சொந்த வரும்படிகள், மீண்டெழும் செலவுகள் ஆகிய வாக்களிப்புக்களின் (அதாவது வாக்களிப்புக்கள் 1, 2, 4, 6) கீழ் வரும் மொத்தச் செலவும், மூலதனச் செலவு வாக்களிப்புக்களின் (அதாவது வாக்களிப்புக்கள் 3, 5, 7) மொத்தமும் முறையே மீண்டெழும் செலவு எனவும், மூலதனச் செலவு எனவும் வெவ்வேருகக் காட்டப்பட்டுள்ளன. 1960-61க்கு முந்தைய ஆண்டுகளில் இத்தகைய ஓர் பாகுபாடு கிடையாதபடியால், அரசிறையால் அடைக்கப்படும் செலவும், கடன் நிதியால் அடைக்கப்படும் செலவும், முறையே மீண்டெழும் செலவுக்கும், மூலதனச் செலவுக்கும் ஒப்பிடத்தக்கன என மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முந்தைய நிதியாண்டுகளில் ஏற்பட்டு, நிதியீட்டப்பட்ட முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகளின் பேரில் உண்டான நட்டங்களேயும், கடன் வேலைகளுக்கான முற்பணங்களேயும், மீண்டெழும் செலவுக்கும், மூலதனச் செலவுக்கும் மாற்றியதன் பயனுக எழுந்த ஏட்டுச் சீரமைப்புக்களே (பற்று, வரவுகள்) தவிர்க்கின்றன. ஆகவே இத்தொகைகள், இலங்கை அரசாங்கத்தின் கணக்குகளிற் பிரசுரிக்கப்பட்ட தொகைகளுடன் ஒத்திருக்கமாட்டா.

†அரசாங்க ஆதிக்கமுள்ள முகவர் நிலையங்களிலிருந்து பெற்ற கடன்கள்.

(அ) 1954-55ம் ஆண்டுக்கான உணவு மானியக்கணக்காக விளங்கிய 360 இலட்சம் ரூபாய்கள், முற்பணக் கணக்குகளிலிருந்து மீண்டெழும் செலவுக்கு, 1958-59ம் ஆண்டில் மாற்றப்பட்டன. 1958-59ம் ஆண்டுக்கான தொகைகளிலிருந்து இந்த ஏட்டுச் சீரமைப்பு தவிர்க்கப்பட்டிருக்க (*குறிப்பைப் பார்க்க), 1954-55ம் ஆண்டுக்கான தொகைகள், இச்சீரமைப்பிற் கேற்பத் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) 1959-60ம் ஆண்டில், சர்வதேச நாணய நிதியில் இலங்கையின் கட்டுப்பணம் அதிகரிக்கப்பட்டதன் விளைவாக ஏற்பட்ட 370 இலட்சம் ரூபாய்கள் கொண்ட கொடுப்பனவையும், 1960-61ம் ஆண்டிற் சர்வதேசப் புனருத்தாரண அபிவிருத்தி வங்கி, சர்வதேச அபிவிருத்திச் சங்கம் ஆகியனவற்றிற்கு செய்த 22 இலட்சம் ரூபாய்கள் கொண்ட கொடுப்பனவையும், சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்குச் செய்த 2 இலட்சம் ரூபா கொண்ட கொடுப்பனவையும், தவிர்க்கின்றது. இக்கொடுப்பனவுகள் மகாவங்கியிலிருந்து பெற்ற விசேடக் கடன்கள் மூலம் ஈட்டப்பட்டன.

(இ) அன்னிய நன்கொடைகளிலிருந்து ஈடுசெய்யப்படும் மூலதனச் செலவுகள், 1960-61ம் ஆண்டு முதலாக வரவு செலவுத்திட்டத்தினுட் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே 1960-61ம் ஆண்டிற்குரிய எண் தொகைகளுள், அன்னிய நன்கொடைகளிலிருந்து ஈடுசெய்யப்பட வேண்டிய மூலதனச் செலவுகளும் உட்படும்படியாகத் திருத்தியமைக்கப்பட்டமையால், இவ்வெண்தொகைகள், 1961ம் ஆண்டு அறிக்கையிற் பிரசுரிக்கப்பட்ட எண் தொகைகளுடன் ஒத்து வரமாட்டா. 1960-61ம் ஆண்டிற்கு முன் வரவு செலவுத்திட்ட நிதியீட்டத்திற்காக இறைசேரிக்குக் கிடைக்கக்கூடிய அன்னிய நன்கொடைகளின் செலவு செய்யப்படாத மிச்சங்கள் மட்டும் நிர்வாகக் கடன்பாடுகளுட் சேர்க்கப்பட்டுள்ளன.

(ஈ) தற்காலிகமானவை.

(உ) இவ் எண்தொகைகள், ''அரசாங்கக் கணக்குகள்'' எனப் பிரசுரிக்கப்பட்ட எண் தொகைகளுடன் ஒத்து வரமாட்டா. ஏனெனில், தேசிய வெள்ள நிவாரண நிதியிலிருந்து அரசிறைக்கு மாற்றப்பட்ட ரூபா 206 இலட்சம் கொண்ட தொகை இங்கு விலக்கப்பட்டமையாலும், அரசாங்கக் கணக்குகளில் தேசிய அபிவிருத்தி நிதியில் வரவு வைத்துக் காட்டப்பட்டதும், தேசிய அபிவிருத்தி வரியினல் கிடைத்ததுமான, ரூபா 186 இலட்சம் கொண்ட தொகை இங்கு சேர்க்கப்பட்டமையாலும் என்க.

ஆண்டில் உண்மையாக ஏற்பட்ட பணக்குறை, மூலமதிப்பீட்டில் உத்தேசிக்கப்பட்டதிலும் பார்க்க ரூபா 1364 இலட்சத்தால் மேலதிகமாக இருந்தது.

1960-61ம் ஆண்டைப் போலவே, 1961-62ம் ஆண்டிலும் உண்மையாக ஏற்பட்ட பணக்குறைக்கும், மதிப்பீட்டில் எதிர்பார்க்கப்பட்ட பணக்குறைக்கும் இடையில் உள்ள வித்தியாசம், பெரும்பாலும், எதிர்பார்க்கப்பட்ட அரசிறை வரவுகள் குறைந்தமையினுல் ஏற்படலாயிற்று. 1960-61ம் ஆண்டில் உண்மையாகச் சேகரிக்கப்பட்ட அரசிறை மூல மதிப்பீடுகளில் எதிர்பார்க்கப்பட்ட அரசிறையிலும் பார்க்க ரூபா 1200 இலட்சத்தாற் குறைந்ததற் கெதிராக, 1961-62ல், அது, ரூபா 1514 இலட்சத்தாற் குறைந்தது. ஆயினும், மூலதனச் செலவு ரூபா 375 இலட்சத்தாற் குறைந்தமை, அரசிறையில் ஏற்பட்ட குறையில் ஒரு பகுதியை ஈடுசெய்தது.

**அரசிறை**

பின்னிணைப்பு II-ல் உள்ள 18-ம் அட்டவணை, 1961-62ம் ஆண்டின் அரசிறை சம்பந்தமான மூல மதிப்பீடுகளையும், உள்ளபடி கிடைத்த அரசிறையையும் பிரதான தலைகளின்படி காட்டுகின்றது. 1961-62ம் ஆண்டில் ரூபா 16253 இலட்சமாக அமைந்த மொத்த அரசிறை, முந்தைய வருடத்தின் உள்ளபடியான அரசிறையிலும் பார்க்க ரூபா 1114 இலட்சத்தாற் கூடியதாகும். இவ் அதிகரிப்பு 1960-61ம் ஆண்டில் ஏற்பட்ட ரூபா 1101 இலட்சம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடத்தக்கது. 1960-61ம் ஆண்டிலும் பார்க்க, அதிகரித்த அரசிறைக்கு, முக்கியமாக, இறக்குமதித் தீர்வைகள் (ரூபா 300 இலட்சம்), உள்நாட்டு வரி, முக்கியமாக சாராயம், புகையிலை ஆகியன (ரூபா 330 இலட்சம்), தேசிய அபிவிருத்தி வரி (ரூபா 190 இலட்சம்), ஆகியன வகைதந்தன. ஏற்றுமதித் தீர்வைகளினுற் கிடைத்த வருமானம் ரூபா 110 இலட்சத்தாற் குறைவுற்றது.

1961-62ம் ஆண்டிற்கான மூல மதிப்பீடுகளோடு ஒப்பிடுகையில், உண்மையாகக் கிடைத்த அரசிறை ரூபா 1514 இலட்சத்தாற் குறைந்து விளங்கிற்று. இக்குறைவு முக்கியமாக, விற்பனை வரியில் ரூபா 450 இலட்சமும், உயர்தொழில் வர்த்தகங்கள் பதிவுசெய்தல் வரியில் ரூபா 340 இலட்சமும், மேலதிக அறவீடும் உட்பட்ட வருமான வரியில் ரூபா 190 இலட்சமும், இறக்குமதித் தீர்வைகளில் ரூபா 210 இலட்சமும், மின்சாரத் திணைக்கள வருமானத்தில் ரூபா 130 இலட்சமும், தேசிய அபிவிருத்தி வரியில் ரூபா 60 இலட்சமும் குறைந்தமையால் ஏற்பட்டது.

*1961-62ம் ஆண்டிற் கிடைத்த அரசிறையை, 1960-61ம் ஆண்டிற் கிடைத்த அரசிறையுடனும், 1961-62ம் ஆண்டிற்கான மூலமதிப்பீட்டுடனும் ஒப்பிடுகையில், அவற்றில் ஏற்பட்ட பிரதான மாற்றங்கள் பின்வருமாறு:—*

### அட்டவணை II எ–2

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1961-62 ற்கான மூலமதிப் பீடுகள் | 1961-62 கிடைத்த அரசிறை | 1960-61 கிடைத்த அரசிறை | 1961-62 கிடைத்த அரசி றையை 1960-61ன் அரசிறை யுடன் ஒப்பிடு கையில் மாற்றம் | 1961-62 கிடைத்த அரசி றையை மூல மதிப் பீட்டுடன் ஒப்பிடு கையில் மாற்றம் |
|---|---|---|---|---|---|
| 1. ஏற்றுமதித் தீர்வைகள் .. .. | 295 | 292 | 303 | — 11 | — 3 |
| (அ) தேயிலை (வரியும் உட்பட) .. | 222 | 226 | 213 | + 13 | + 4 |
| (ஆ) இரப்பர் (ஏற்றுமதி உத்தரவுச் சீட்டுக் கட்டணமும் உட்பட) .. | 46 | 30 | 54 | — 24 | — 16 |
| (இ) தெங்குப் பொருட்கள் .. | 22 | 31 | 30 | + 1 | + 9 |
| 2. இறக்குமதித் தீர்வைகள் .. .. | 486 | 465 | 435 | + 30 | — 21 |
| (அ) பருத்தி ஆடைவகைகள் .. | 18 | 25 | 21 | + 4 | + 7 |
| (ஆ) குடிவகை .. .. | 16 | 14 | 12 | + 2 | — 2 |
| (இ) புகையிலையும் சிகரட்டும் .. | 91 | 52 | 62 | — 10 | — 39 |
| (ஈ) ஏனையவை .. .. | 170 | 192 | 160 | + 32 | + 22 |
| 3. வருமான வரி (மேலதிக அறவீடு நீக்கி) | 242 | 232 | 230 | + 2 | — 10 |
| மேலதிக அறவீடு .. .. | 40 | 31 | 29 | + 2 | — 9 |
| 4. சொந்தச் செலவு, செல்வம், நன்கொடை ஆகிய வரிகள் .. .. .. | 16 | 12 | 12 | 0 | — 4 |
| 5. சாராய விற்பனை இலாபம் .. .. | 72 | 72 | 65 | + 7 | 0 |
| 6. புகையிலை வரி .. .. .. | 60 | 63 | 45 | + 18 | + 3 |
| 7. பாரமான எண்ணெ பாவிக்கும் மோட்டோர் வண்டிகளின் வரி .. .. | 12 | 9 | 2 | + 7 | — 3 |
| 8. மின்சாரத் திணைக்கள வருமானம் .. | 45 | 32 | 27 | + 5 | — 13 |
| 9. 1960-61 வரவு செலவுத் திட்டத்திற் புகுத்தப்பட்ட புதிய வரிகள் .. | | | | | |
| (அ) காணி வரி .. .. | 12 | 12 | 8 | + 4 | 0 |
| (ஆ) உயர்தொழில் வர்த்தகங்கள் பதிவு செய்தல் வரி .. | 37 | 3 | 3 | 0 | — 34 |
| (இ) பங்கு முதல் வரி .. .. | 6 | 2 | 2 | 0 | — 4 |
| (ஈ) விசா வரி .. .. | 6 | 6 | 3 | + 3 | 0 |
| 10. 1961-62 வரவு செலவுத்திட்டத்திற் புகுத்தப்பட்ட புதிய வரிகள் .. | | | | | |
| (அ) விற்பனை வரி (நடைமுறைக்குக் கொண்டு வரப்படவில்லை) .. | 45 | 0·1 | — | +0.1 | — 45 |
| (ஆ) தேசிய அபிவிருத்தி வரி .. | 25 | 19 | — | + 19 | — 6 |
| (இ) பங்கீட்டு அரிசிப் புத்தக வரி .. | 5 | 0·1 | — | 0 | — 5 |
| (ஈ) மேலதிக வரி .. .. | 1 | 0 | — | 0 | — 1 |
| 11. ஏனைய அரசிறை .. .. | 372 | 375 | 350 | + 25 | + 3 |
| மொத்தம் .. .. .. | 1,777 | 1,625 | 1,514 | +111 | —152 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

ஏற்றுமதித் தீர்வைகளினுற் கிடைத்த அரசிறை, *1960-61*ம் ஆண்டிலும் பார்க்க ரூபா *110* இலட்சத்தாற் குறைந்தது ஆகும். இவ்வீழ்ச்சி, இரப்பர்த் தீர்வை வருமானம் ரூபா *240* இலட்சத்தாற் குறைந்தமையினுலும், அதில் ஒரு பகுதியை ஈடுசெய்து தேயிலையினுற் கிடைத்த அரசிறை ரூபா *130* இலட்சத்தாலும், தெங்கு பொருட்களினுற் கிடைத்த அரசிறை ரூபா *10* இலட்சத்தாலும் அதிகரித்தமையினுலும், ஏற்பட்டது.

இரப்பரின் மேல் உள்ள ஒரே மட்டமான தீர்வைக்குப் பதிலாகச் சாய்வுப் பிரமாணத் தீர்வைமுறை ஒன்று, 1961ம் ஆண்டு கார்த்திகை மாதம் 24-ம் திகதி அமைக்கப்பட்டது. இரப்பரின் விலைகள் மந்தமடைந்திருந்ததைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட சாய்வுப் பிரமாணத் தீர்வை முறையில், தீர்வை விகிதத்தைக் குறைக்கும் அம்சமும் அடங்கியிருந்தது. அதாவது சாய்வுப் பிரமாணத் தீர்வைமுறை அமைக்கப்படுவதற்கு முன் ஒரு இருத்தலுக்கு 20 சதமாக இருந்த தீர்வை, புதிய முறையின்படி ஒரு இருத்தலுக்கு 13 சதமாக விளங்கியது. தேயிலை, தெங்குப் பொருட்கள் ஆகியனவற்ருல் கிடைத்த அரசிறை அதிகரித்தமை, முக்கியமாக அவற்றின் ஏற்றுமதி அளவுகள் அதிகரித்தமையினுல் ஏற்பட்டது.

இறக்குமதித் தீர்வைகளாற் கிடைத்த அரசிறை, முந்தைய வருடத்திலும் பார்க்க ரூபா 300 இலட்சம் கூடியதாகும். ''ஏனைய பொருட்கள்'' என்ற தொகுதியிலேயே அரசிறை அதிகரிப்புக் கூடுதலாக ஏற்பட்டது. இறக்குமதித் துறையிலிருந்து அதிகரித்த அரசிறை கிடைத்தமைக்கு உள்ள காரணம், காலத்திற்குக் காலம் இறக்குமதித் தீர்வைகள் உயர்த்தப்பட்டமையினுலேயே எனக் கூறலாம். 1961ம் ஆண்டு தை மாதத்தில் உணவுப் பொருட்கள் தவிர்ந்த, ஏனைய பொருட்களின் மேல் ஒரு பொதுவான 5 சதவீத இறக்குமதித் தீர்வை புகுத்தப்பட்டது. இந்நடவடிக்கையின் பயனுக அரசிறையின் மேல் ஏற்பட்ட முழுமையான பலாபலன், 1961-62ற் தான் காணப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட சில பொருட்களின் மேல் உள்ள இறக்குமதித் தீர்வைகள், 1962-63ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தின்படி 1962ம் ஆண்டு ஆடி மாதம் மேலும் உயர்த்தப்பட்டன. ரத்துச் செய்யப்பட்ட விற்பனை வரிக்குப் பதிலாக, 1962ம் ஆண்டு ஆவணியில் நடைமுறையிலுள்ள இறக்குமதித் தீர்வைவிகிதங்கள் 20 சதவீதத்தால் உயர்த்தப்பட்டன. 1961-62ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில், புகையிலை, சிகரட்டு ஆகியனவற்றின்மேலுள்ள இறக்குமதித் தீர்வைகள் உயர்த்தப்பட்டமையைத் தொடர்ந்து அவற்றின் இறக்குமதி அளவுகள் குறைந்தமையினுல், புகையிலை சிகரட்டு ஆகியவற்றின் இறக்குமதியினுற் கிடைத்த அரசிறை ரூபா 100 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றது. புகையிலை, சிகரட்டு ஆகியவற்றினுற் கிடைத்த அரசிறை, மூலமதிப்பீடுகளில் எதிர்ப்பார்க்கப்பட்ட தொகையிலும் பார்க்க ரூபா 390 இலட்சத்தாற் குறைவுற்றது என்பது கவனிக்கத்தக்கது. உயர்ந்த தீர்வைகளை அடிப்படையாகக் கொண்ட இந்த மூல மதிப்பீடு, உண்மையில், நுகர்ச்சியில் ஏற்படக்கூடிய வீழ்ச்சியைக் கருத்திற் கொள்ளாமற் கணிக்கப்பட்ட ஒரு மிகை மதிப்பீடு என்றே கூறலாம். ஆயினும் ஓரளவு ஈடு செய்யும் அதிகரிப்பாக, உள்நாட்டுப் புகையிலை வரியினுற் கிடைத்த அரசிறை, ரூபா 180 இலட்சத்தால் உயர்வுற்றது. இவ் உள்நாட்டுப் புகையிலை வரியும், 1961-62ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்திலேயே உயர்த்தப்பட்டது.

1960-61ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்திற் புகுத்தப்பட்ட வரிகள், 1961-62ல் ஆக ரூபா 70 இலட்சம் கொண்ட மேலதிகமான வருமானத்தை மட்டும் தந்தன. மூலமதிப்பீடுகளில் அவற்றில் இருந்து எதிர்ப்பார்க்கப்பட்ட ரூபா 610 இலட்சத்திற்கு எதிராக அவற்றிலிருந்து உண்மையிற் கிடைத்த அரசிறை, ஆக ரூபா 230 இலட்சமாக மட்டும் விளங்கியது. இவ் வீழ்ச்சி, ஏறக்குறைய முழுவதும், உயர்தொழில், வர்த்தகங்கள் ஆகியவற்றைப் பதிவுசெய்தல்மேல் உள்ள வரி சம்பந்தமாகவே ஏற்பட்டது. இவ்வரியிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட ரூபா 370 இலட்சத்திற்கு எதிராக ஆக ரூபா 30 இலட்சம் மட்டுமே கிடைத்துள்ளது. மூலமதிப்பீட்டில் இவ்வரிக்கு உட்பட்டனவாக இருந்த, ரூபா 3600க்குக் குறைவான வருடாந்த வருமானமுடைய உயர் தொழில்களும், வர்த்தகங்களும், இறுதிச்சட்டத்தில் விதிவிலக்குப் பெற்றன. இந்தக் காரணமும், பரிபாலனத் தாமதங்களும் தான் இத்துறையிலிருந்து கிடைத்த அரசிறை குறைவடைவதற்குத் துணைபுரிந்தன எனக் கூறலாம்.

*1961-62*ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்திற் புகுத்தப்பட்ட புதிய வரிகளில், தேசிய அபிவிருத்தி வரியினூற் கிடைக்குமென மதிப்பிடப்பட்ட ரூபா *250* இலட்சத்திற்கு எதிராக ரூபா *190* இலட்சம் கிடைத்தது. *1961-62*ல் ரூபா *450* இலட்சம் தரும் என மதிப்பிடப்பட்ட விற்பனை வரி, *1962-63*ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டம் *1962*ம் ஆண்டு, ஆடி இறுதியில் அறிவிக்கப்படும்வரை, புகுத்தப்படவில்லை. எனினும், இந்த வரி இரண்டு நாட்களுக்கு நடைமுறையில் இருந்தபின் ரத்துச் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக, பலதரப்பட்ட பொருட்களின் மேல் உள்ள நடைமுறை இறக்குமதித் தீர்வை விகிதங்கள் *20* சதவீதத்தால் உயர்த்தப்பட்டன.

### நடைமுறைச் செலவு

*1959-60* முதல் *1962-63* வரை உள்ள ஆண்டுகளுக்கான நடைமுறைச் செலவு, மூலதனச் செலவு, ஆகியவை பற்றிய தரவுகள் பின்வரும் அட்டவணையிற் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை II எ – 3**

**அரசாங்கத்தின் செலவு**

*பத்து இலட்சம் ரூபாய்களில்.*

| வருடம் | நடைமுறைச் செலவு(1) | மூலதனச் செலவு (2) | | |
|---|---|---|---|---|
| | | மெய்ச்சொத்துக்களைக் கொள்ளுதல் ஆக்குதல் பராமரித்தல் | அரசாங்க முகவர் நிலையங்களுக்குக் கடன் | மொத்தம் |
| 1959–60 .. .. .. | 1,365·4 | 440·1 | 55·6 | 495·7 |
| 1960–61 .. .. .. | 1,471·3 | 471·9 | 47·2 | 519·1 |
| 1961–62 மூலமதிப்பீடு உண்மையாக ஏற்பட்டவை .. .. | 1,450·3 | 580·6 | 59·9 | 640·5 |
| (தற்காலிகமானது) | 1,495·4 | 513·0 | 83·0 | 596·0 |
| 1962–63 மூலமதிப்பீடு | 1,585·4 | 560·5 | 9·8 | 570·3 |

*மூலம்: இலங்கை மகா வங்கி.*

1 மீண்டுவரும் செலவுகளுக்கான வாக்குப்பணங்கள் *1, 2, 4, 6* ஆகியனவற்றின் மொத்தத்திலிருந்து, ஆழ்நிதிக்கு உதவிய தொகையையும், நெடுங்கால உபயோகமுள்ள பொருட்களின் கொள்வனவு, பராமரிப்பு போன்ற மூலதனச் செலவுகளையும் நீக்கிய பின்னர் பெறப்படுவது தான் நடைமுறைச் செலவாகும்.

2 மூலதனச் செலவு என்பதில், ஒரு வருடத்திற்கு மேலான உபயோகமுள்ள நிலையான இருப்புச் சொத்துக்களை ஆக்குவதற்கோ, கொள்ளுவதற்கோ, பராமரித்தற்கோ, செலவான செலவுகளும், இ.போ.ச. துறைமுக (கப்பற் சரக்குக்) கூட்டுத்தாபனம், உள்ளூர்க் கடன்நிதி, அபிவிருத்திநிதி ஆகியவற்றிற்கு வழங்கிய கடன்களால் ஏற்பட்ட நிதிச் சொத்துக்களும், அடங்கும். இவ்வரையறுப்பின்படியுள்ள மூலதனச் செலவு என்பதும், அபிவிருத்திச் செலவு என்பதும் ஒரு கருத்து உடையனவல்ல. ஏனெனில், அபிவிருத்தித் தன்மையில்லாத சில முதலீட்டுச் செலவு விடயங்கள் மூலதனச் செலவினுட் சேர்க்கப்பட்டிருப்பதோடு, அபிவிருத்தித்தன்மையுடைய சில நடைமுறைச் செலவு விடயங்கள் சேர்க்கப்படவில்லை. மூலதனச் செலவு என்பது பின்வருவனவற்றைக் கொண்டுள்ளது:—மூலதனச் செலவிற்கான வாக்குப்பணங்கள் *3, 5, 7* ஆகியனவற்றின் செலவும், அந்நிய உதவிகளில் (கடன்கள் நன்கொடைகளில்) அறவிடப்படவேண்டிய செலவும், மீண்டுவரும் செலவிற்கான வாக்குப் பணங்களில் உள்ள மூலதனச்செலவு விடயங்களும், இரப்பர், தேயிலை மாற்று நடுகைக்கான மான்னியச் செலவு போன்ற வரவு செலவுத்திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவுகளும், மின்சாரத்திணைக்களத்தின் ஒதுக்கு நிதிச் செலவுகளும், இவை போன்றனவும் ஆகும். வரவு செலவுத்திட்டத்திற்கு அமையாத செலவுகள், *1959-60*ல் ரூபா *389* இலட்சமும், *1960-61*ல் ரூபா *283* இலட்சமும், *1961-62*ன் மதிப்பீட்டின்படி ரூபா *336* இலட்சமும் தற்காலிகமாக ரூபா *180* இலட்சமும், *1962-63*ல் ரூபா *240* இலட்சமுமாக உள்ளன.

*1961-62*ம் ஆண்டின் நடைமுறைச் செலவான தற்காலிகத் தொகை, முந்தைய ஆண்டின் தொகையிலும் பார்க்க ரூபா *241* இலட்சம் கொண்ட அதிகரிப்பைக் காட்டுகின்றது. ஒப்பியல்பாக நோக்கின் *1960-61*ம் ஆண்டில், ஏற்பட்ட அதிகரிப்பு ரூபா *1059* இலட்சம் கொண்டதாகவும், *1959-60*ல் ஏற்பட்ட அதிகரிப்பு ரூபா *910* இலட்சம் கொண்டதாகவும் உள்ளன. *1961-62*ம் ஆண்டின் நடைமுறைச் செலவு ஒரு குறைந்த அளவால் மட்டும் அதிகரித்தமைக்கு உள்ள முழுமையான காரணம், உணவு மான்னியச்

செலவு குறைவுற்றமையேயாகும். முந்தைய இரு ஆண்டுகளிலும் உணவு மான்னியச் செலவின் அதிகரிப்புத்தான் நடைமுறைச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு முக்கிய காரணியாக விளங்கிற்று. 1961-62ம் ஆண்டில் இளைப் பாறற் சம்பளங்கள், பொதுப்படுகடன் வட்டி, கல்வி, ஆகிய செலவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பில் ஒரு பகுதி, உணவு மான்னியச் செலவில் ஏற்பட்ட வீழ்ச்சியால் ஈடு செய்யப்பட்டது.

உணவு மான்னியச் செலவு, 1958-59ல் ரூபா 1465 இலட்சமாகவும், 1959-60ம் ஆண்டில் ரூபா 1930 இலட்சமாகவும், 1960-61ல் ரூபா 2480 இலட்சமாகவும் இருந்ததற்கு எதிராக, 1961-62ல் ரூபா 2354 இலட்சமாக விளங்கியது. கோதுமை மா சீனி ஆகியனவற்ருற் கிடைத்த இலாபத்தில் ஏற்பட்ட ரூபா 389 இலட்சம் கொண்ட அதிகரிப்பில் ஒரு பகுதியை, அரிசி மான்னியத்தின் பேரில் ஏற்பட்ட ரூபா 268 இலட்சம் கொண்ட அதிகரித்த செலவு ஈடுசெய்தது. கோதுமை மா விற்பனையாற் கிடைத்த உயர்ந்த இலாபம், கோதுமை மாவின் விலை இருத்தலுக்கு 5 சதத்தால் (அதாவது 23 சதத்திலிருந்து 28 சதத்திற்கு), 1961-62ம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் உயர்த்தப்பட்டமையால் ஏற்பட்டது எனக் கூறலாம். சீனி சம்பந்தமாக, வெள்ளைச் சீனியின் கொள்வனவு விலையிற் கூர்மையான வீழ்ச்சி ஏற்பட்டதும் அல்லாமல், 1961-62ம் ஆண்டில் வெள்ளைச் சீனி மட்டுமே இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டது. இதன் விளைவாகவும், சிவப்புச் சீனியிலும் பார்க்க வெள்ளைச் சீனி இருத்தலுக்கு 7 சதத்தாற் கூடிய விலைக்கு விற்கப்படுவதன் பயனுகவும், சீனி விற்பனையாற் கிடைத்த இலாபம் அதிகரிக்கலாயிற்று. வெள்ளைச் சீனியின் சில்லரை விற்பனை விலை, 1961-62ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் 5 சதத்தால் உயர்த்தப் பட்டது. எனினும் பின்பு 1961ம் ஆண்டு மார்கழியில் அது பழைய விலைக்குக் குறைக்கப்பட்டது. அரிசி மான்னியத்தின் பேரில் (நுகர்வோர் மான்னியமும் உற்பத்தியாளர் மான்னியமும் சேர்த்து) உள்ள மொத்தச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பு, முந்தைய வருடங்களில் ஏற்பட்ட அதிகரிப்புகளிலும் பார்க்க எவ்வளவோ குறைவானதாகும். இதற்கு உள்ள காரணம், அரசாங் கத்தினுல், சில்லறை விநியோகக்காரர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட பங்கீட்டு அரிசி குறைவுற்றமையும், உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட கொள்வனவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு முந்தைய வருடங்களில் ஏற்பட்ட அதிகரிப்புகளிலும் பார்க்கக் குறைவாக இருந்தமையும், ஆகும். விற்பனை செய்யப்பட்ட பங்கீட்டரிசியின் அளவு குறைவுற்றமை, ஒரு வகையில், அரசாங்கக் கொள்கையின் பலனுகச் சில்லரை விநியோகக்காரர்கள் குறைவான மட்டத்திற் தமது கையிருப்புக்களை வைத்திருந்தமையினுலும், இன்னெருவகையில், 1961-62ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்திற் புகுத்தப்பட்ட பங்கீட்டரிசிப் புத்தக வரியிலிருந்து சலுகை பெறுவதற்காக, வருமான வரி இறுப்போர் தமது பங்கீட்டரிசிப் புத்தகங்களைத் திருப்பிக் கொடுத்தமையினுலும், ஏற்பட்டது எனக் கூறலாம்.

1961-62ம் ஆண்டில் உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் 25,065,890 புசல் கொண்ட நெல், கொள்வனவு செய்யப்பட்டது. 341,032 தொன் அரிசிக்குச் சமமான இத்தொகை, 1960-61ம் ஆண்டிற்குரிய 326,272 தொன்களுடனும், 1959-60ம் ஆண்டிற்குரிய 270,000 தொன்களுடனும் ஒப்பிடத்தக்கது.

பர்மாவிலிருந்து பெற்ற அரிசியின் சராசரி இறக்குமதி விலை, ஒரு தொன்னுக்கு ரூபா 535 என்பது, முந்தைய ஆண்டிற்குரிய விலையான ரூபா 530 உடன் ஒப்பிடத்தக்கது. இலங்கைக்குக் கோதுமை மா அனுப்பும் முக்கிய நாடான அவுஸ்திரேலியாவிலிருந்து பெற்ற கோதுமை மாவின் விலை, முந்தைய வருடத்திற்குரிய மட்டத்திலேயே மாற்றமின்றி நின்றது. 1961-62ம் ஆண்டில், ஒரு தொன்னுக்கான வெள்ளைச் சீனியின் இறக்குமதி விலை, ரூபா 565-ல் இருந்து ரூபா 500-க்கு வீழ்ச்சியுற்றது.

### மூலதனச் செலவு

*1961-62*ல் ரூபா 5960 இலட்சமாக அமைந்த மூலதனச் செலவு, முந்தைய வருடத்திற்குரிய செலவிலும் பார்க்க ரூபா 769 இலட்சத்தாற் கூடியதாகும். அரசாங்க முகவர் நிலையங்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் ரூபா 358 இலட்சத்தால் அதிகரித்திருக்கையில், மெய்ச் சொத்துக்களை ஆக்குதல், கொள்ளுதல், பராமரித்தல் ஆகியனவற்றின் பேரில் ஏற்பட்ட செலவு, ரூபா 411 இலட்சத்தால் அதிகரித்தது. கிடைத்துள்ள தரவுகளின்படி, இவற்றிற் பெரிய அதிகரிப்புகள், பொதுப்பயன்படுசேவைகள், கமத்தொழில், நீர்ப்பாசனம், மீன்பிடித்தல் ஆகியனவற்றிலேயே ஏற்பட்டுள்ளன எனத் தோன்றுகின்றது.

### பணக்குறை நிவர்த்திக்கு நிதியீட்டுதல்

*1961-62*ம் ஆண்டு ஏற்பட்ட நிகரப் பணக்குறை நிவர்த்திக்கப்பட்ட முறையைப் பின்வரும் அட்டவணை மூலாதாரப் பாகுபாடு செய்து காட்டுவதுடன், அதனால் ஏற்பட்ட நிகர நாணய விரிவுவிளைவுகளையும் முந்தைய நிதியாண்டுடன் ஒப்பிட்டுக்காட்டுகின்றது.

#### அட்டவணை II எ–4

#### பணக்குறை நிவர்த்திக்கு நிதியீட்டுதல்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1960–61 | | | 1961–62 (தற்காலிகமானது) | | |
|---|---|---|---|---|---|---|
| 1. நிர்வாகக் கடன்பாடு .. .. | | | 29·4 | | | 104·5 |
| 2. அந்நிய உதவி: (அ) கடன்கள்: | | | | | | |
| (i) மொத்தத் தொகை | 16·3 | | | 44·5 | | |
| (ii) திருப்பிக் கொடுக்கப் பட்டவை நீக்கி .. | 3·0 | 13·3 | | 5·3 | 39·2 | |
| (ஆ) நன்கொடைகள் .. | | 13·3 | 26·6 | | 19·0 | 58·2 |
| 3. உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடு—வங்கிகளல்லாத இதர மூலாதாரங்கள் | | | | | | |
| (அ) மொத்தத்தொகை .. .. | | 197·3 | | | 147·3 | |
| (ஆ) ஆழ்நிதிக்கு உதவிய தொகை நீக்கி | | 32·1 | 165·2 | | 39·5 | 107·8 |
| 4. உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடு—வங்கிகள் | | | 241·4 | | | 226·6 |
| 5. அரசாங்க மிச்சங்களின் வீழ்ச்சி (சய அடையாளம் அதிகரிப்பைக் குறிக்கும்) .. | | | இல்லை | | | −40·2 |
| 6. நிகரப் பணக்குறை .. .. | | | 462·5* | | | 456·9 |
| 7. ஐக்கிய அமெரிக்க உதவியால் எழுந்த இணைக்கு இணையான உள்ளூர் நிதிகளின் வீழ்ச்சி (சய அடையாளம் அதிகரிப்பைக் குறிக்கும்) .. .. .. | | | —7·5 | | | 4·0 |
| 8. வரவு செலவுத்திட்டத்தின் நிகர நாணய விரிவு விளைவு (4 + 5 + 7) .. .. | | | 233·9 | | | 190·4 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

**1960-61*ம் ஆண்டுமுதல், அந்நிய நன்கொடைகளிலிருந்து ஈடு செய்யத்தக்க மூலதனச் செலவுகளும் வரவு செலவுத்திட்டத்திற்குள் கொண்டுவரப்பட்டுள்ளன. இவையும் சேரும்படியாக இவ் எண் தொகைகள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

மூல மதிப்பீட்டின்படி ரூபா 2805 இலட்சமாக அமைந்த நிகரப் பணக்குறையை நிவிர்த்திப்பதற்கு நிதியமைச்சர் அறிவித்த நிதி ஆதாரங்களாவன, உள்நாட்டுச் சந்தைக்கடன்பாட்டிலிருந்து ரூபா 1620 இலட்சமும், அந்நிய உதவியிலிருந்து ரூபா 1290 இலட்சமும் ஆகும். (1) இப்பகுதியில் முன்னர் கூறப்பட்ட காரணங்களின் விளைவாக உண்மையில் ஏற்பட்ட நிகரப் பணக்குறை, ரூபா 4569 இலட்சமாக உள்ளது. எதிர்பார்க்கப்பட்ட பணக்

(1) வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்ட தொகைகள், முறையே ரூபா 3294 இலட்சமும், ரூபா 2000 இலட்சமும், ரூபா 1400 இலட்சமும் ஆகும். இத்தொகைகளிலிருந்து ஆழ்நிதிக்கு உதவிய தொகையாகிய ரூபா 380 இலட்சத்தையும், அந்நிய கடன்களின் பேரிற் திருப்பிக் கொடுக்கப்பட்ட ரூபா 109 இலட்சத்தையும் நீக்கிய பின்னர் முறையே, ரூபா 2805 இலட்சம், ரூபா 1620 இலட்சம், ரூபா 1290 இலட்சம் ஆகிய தொகைகள் பெறப்பட்டன. ஏனெனில், ஆழ்நிதிக்கு உதவிய தொகைகளும், திருப்பிக் கொடுக்கப்பட்ட அந்நிய கடன் தொகைகளும், நிகரப் பணக்குறையைக் கணிப்பதற்குச் சேர்க்கப்படுவதில்லை.

குறையிலும் பார்க்க உண்மையாக ஏற்பட்ட பணக்குறை எவ்வளவோ அதிகரித்தமையினாலும், உள்நாட்டுச் சந்தைக்கடன்பாட்டில் இருந்து கிடைத்த தொகை குறைவுற்றமையினாலும், அரசாங்கம், வங்கியிலிருந்து குறிப்பிடத்தக்க அளவாற் கடன்படவேண்டி நேரிட்டது. எனினும், பொது மக்களின் கட்டுப்பணங்களாகவும், கூட்டுத்தாபனங்களின் செலவிடப்படாத மிச்சங்களாகவும் நியாயமான தொகை இறைசேரியில் வளர்ந்துள்ளமையால், (நிர்வாகக் கடன்பாடுகளைக் காண்க) வங்கியிலிருந்து கடன்படவேண்டியமை ஓரளவு தடுக்கப்பட்டது.

இவ்வகையில் 1961-62ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தினால் ஏற்பட்ட நிகர நாணய விரிவுவிளைவு, ஐக்கிய அமெரிக்க உதவிகளினால் எழுந்த இணைக்கு இணையான உள்ளூர் நிதிகளில் ஏற்பட்ட மாற்றங்களுக்கும் இடம்விட்டுக் கணித்தபின், ரூபா 1904 இலட்சமாக விளங்கியது. இது, 1960-61ம் ஆண்டில் ஏற்பட்ட ரூபா 2339 இலட்சம் கொண்ட விரிவிலும் பார்க்கக் குறைவானதாகும். 1959-60ம் ஆண்டிற்குரிய ஒப்பியல்பான விரிவு, ரூபா 2511 இலட்சமாக உள்ளது.

1961-62ம் ஆண்டில் வங்கிகளிடமிருந்து பெற்ற மொத்தக் கடனாகிய ரூபா 2266 இலட்சத்தில், ரூபா 1620 இலட்சம் மகாவங்கியிடமிருந்தும், ரூபா 645 இலட்சம் வர்த்தக வங்கிகளிடமிருந்தும் பெறப்பட்டன. மகா வங்கியின் நேரடியான முற்பணங்கள் ரூபா 210 இலட்சத்தால் வீழ்ச்சி யுற்றன. மகாவங்கி கொள்வனவு செய்த இறைசேரி உண்டியல்களின் மொத்தம் ரூபா 1839 இலட்சமாகும். வர்த்தக வங்கிகள் ரூபா 420 இலட்சம் பெறுமானமுடைய இறைசேரி உண்டியல்களையும், ரூபா 231 இலட்சம் பெறுமானமுடைய ரூபாக் கடன்களையும், கொள்வனவு செய்திருக்கையில், அவற்றின் உடமையில் இருந்த வரி ஒதுக்கு நிதிப் பத்திரங்கள் ரூபா 6 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்தன. 1960-61ம் ஆண்டில் வர்த்தக வங்கிகள், ரூபா 373 இலட்சம் கொண்ட இறைசேரி உண்டியல்களிலும், ரூபா 13 இலட்சம் கொண்ட வரி ஒதுக்கு நிதிப் பத்திரங்களிலும் முதலீடு செய்தற் கெதிராக, அவற்றின் உடமையில் இருந்த ரூபாப் பிணைகள் ரூபா 15 இலட்சத் தால் வீழ்ச்சியுற்றன. எனவே, அவ்வாண்டில் வர்த்தக வங்கிகள் அரசாங்கப் பத்திரங்களிற் செய்த மொத்த முதலீடு, ரூபா 371 இலட்சமாக இருந்தது.

இந்நிதியாண்டின் தொடக்கத்தில் அற்பமாக இருந்த அரசாங்கப் பண மிச்சங்கள், ரூபா 402 இலட்சத்தால் அதிகரித்தன.

மூலதனச் செலவுகளுக்காகப் பெறப்பட்ட அந்நிய உதவிகள், 1959-60ம் ஆண்டில் ரூபா 386 இலட்சமாகவும், 1960-61ல் ரூபா 296 இலட்சமாகவும் அமைந்தமைக்கெதிராக, 1961-62ல் அவை ரூபா 635 இலட்சமாக விளங்கின. இம்மூன்று ஆண்டுகளிலும் திருப்பிக் கொடுக்கப்பட்ட அந்நிய கடன்கள், முறையே, ரூபா 27 இலட்சமாகவும், ரூபா 30 இலட்சமாகவும், ரூபா 53 இலட்சமாகவும் உள்ளன. வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட அந்நிய உதவியின் அளவிலும் பார்க்க உண்மையிற் கிடைத்த உதவி குறை வுற்றமை, பணக்குறை நிவர்த்திக்கு நிதியீட்டுதல் சம்பந்தப்பட்டவரை யில் அவ்வளவு முக்கியமானதல்ல என்பது கவனிக்கத்தக்கது. ஏனெனில் அவ்வுதவிகள் கிடைக்கும் பொழுது, குறிப்பாக அவ்வுதவிகளை உபகரணங் களாகப் பெறும் பொழுது, உண்மையில் அவற்றிற்குச் சரிநிகரான பெறுமான முடைய மூலதனச் செலவும் ஏற்படுகின்றது. 1961-62ம் ஆண்டிற் கிடைத்த அந்நிய உதவிகளின் விபரங்கள் பின்வருமாறு:—

**அட்டவணை II எ-5**

**கடன்கள்:**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | கடன்பட்ட தொகை | திருப்பிக் கொடுக் கப்பட்ட தொகை | நிகரவரவு |
|---|---|---|---|
| ச.பு.அ.வ. .. .. .. .. .. .. | 29·5 | 3·9 | 25·6 |
| கனடா .. .. .. .. .. .. | — | 0·3 | —0·3 |
| சீனு .. .. .. .. .. .. | — | 1·0 | —1·0 |
| பிரிட்டன் .. .. .. .. .. .. | 3·3 | — | 3·3 |
| ஐக்கிய அமெரிக்கா .. .. .. .. .. | 8·2 | — | 8·2 |
| ரூசியா .. .. .. .. .. .. | 3·4 | — | 3·4 |
| | 44·5 | 5·3 | 39·2 |

**நன்கொடைகள்**

| | | |
|---|---|---|
| கொழும்புத் திட்டம்: | | |
| (1) அவுஸ்திரேலியா .. .. .. .. | — | |
| (2) கனடா .. .. .. .. | 5·2 | |
| (3) நியூசிலாந்து .. .. .. .. | — | |
| | | 5·2 |
| சீனு .. .. .. .. .. | | 8·3 |
| ஜெர்மனி .. .. .. .. .. | | 4·8 |
| ஐக்கிய அமெரிக்கா.. .. .. .. .. | | 0·8 |
| | | 19·0 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

வங்கிகளல்லாத இதர மூலாதாரங்களாக அமைந்த உள்நாட்டுச் சந்தைக்கடன்பாடுகள், *1960-61*ம் ஆண்டிற்குரிய ரூபா *1652* இலட்சத்தி லிருந்து, *1961-62*ம் ஆண்டில் ரூபா *1078* இலட்சத்திற்குத் தீட்சணமாகக் குறைந்து காணப்பட்டன.

கூட்டாகவும் தனியாகவும், உள்ள முதலீட்டக்காரர்கள் அரசாங்கப் பத்திரங்களுக்குக் குறைவான இணக்கமளித்தமை செறிந்து காணப்பட்டது. இதற்கு ஒரே ஒரு விதிவிலக்காக, ஊழியர் சேமநிதிமட்டும் ரூபா *40* இலட்சம் கூடுதலான தொகையை, அதாவது *1960-61*ம் ஆண்டிற்குரிய ரூபா *555* இலட்சத்திலிருந்து, *1961-62*ல் ரூபா *594* இலட்சத்தை, அரசாங்கப் பத்திரங் களில் முதலீடு செய்தது. ஏனைய பிரதான முதலீட்டக்காரர் சம்பந்தமான மாற்றங்கள் பின்வருமாறு:—

**அட்டவணை II எ-6**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1960/61 | 1961/62 | நிகர மாற்றம் |
|---|---|---|---|
| 1. சேமிப்பு நிலையங்கள் .. .. .. .. | 22·8 | 12·5 | —10·3 |
| 2. சேமநிதிகளும் ஓய்வுச் சம்பள நிதிகளும் (ஊழியர் சேம நிதி அல்லாதவை) .. .. .. .. | 33·7 | 25·0 | — 8·7 |
| 3. காப்புறுதிக் கூட்டுநிலையங்கள் .. .. .. | 15·2 | 10·1 | — 5·1 |
| 4. இதர சங்கங்களும் நிலையங்களும் .. .. .. | 10·4 | — 7·4 | —17·8 |
| 5. ஏனைய கூட்டு நிலையங்கள்.. .. .. .. | 15·1 | — 1·4 | —16·5 |
| 6. தனி ஆட்கள் .. .. .. .. | 2·5 | 1·7 | — 0·8 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

*1961-62*ம் ஆண்டில் வங்கிகளல்லாத ஏனைய முதலீட்டக்காரர்கள் அரசாங்கப் பிணைப்பத்திரங்களுக்குக் குறைவான ஆதரவு அளித்தமைக்கு உள்ள காரணம், அவ்வாண்டில் சில விசேடத் தன்மைகள் நிலவியமையினு லேயே எனக் கூறலாம். தனிப்பட்டோரின் உடமைகளாக வர்த்தக வங்கிகளில் உள்ள தவணை, சேமிப்பு ஆகிய வைப்புக்கள், *1960-61*ம் ஆண்டில் ரூபா *20* இலட்சத்தால் வீழ்ச்சியுற்றமைக்கு எதிராக, *1961-62*ம் ஆண்டில் ரூபா *427* இலட்சத்தால் அதிகரித்துள்ளன என்ற உண்மையை நோக்குமிடத்து,

வங்கிகளல்லாத மூலாதாரங்கள் அரசாங்கப் பிணைப்பத்திரங்களுக்கு உதவிய தொகை குறைவுற்றமை, சேமிப்புகள் பொதுவாகக் குறைந்தமையின் காரணத்தால் ஏற்பட்டதல்ல என்பது தெரிகின்றது. ஆனால் வர்த்தக வங்கிகளிலுள்ள தவணை, சேமிப்பு ஆகிய வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு, ஒருவகையில் அரசாங்க பிணைப் பத்திரங்களிலுள்ள முதலீடுகள் நிலைபெயர்ந்தமையைக் குறிக்கின்றது. நிலையான வைப்புக்களாக உள்ள ரூபா 25,000 அல்லது அதற்கு மேலான தொகைகளுக்குக் கொடுக்கப்படும் வட்டி விகிதத்தை, 1961ம் ஆண்டு புரட்டாதியில் அநேகமான வர்த்தக வங்கிகள் 3 சதவீதத்திற்கு உயர்த்தின.

கூட்டு நிலையங்கள், சேமநிதி நிலையங்கள், இளைப்பாறற் சம்பள நிதி நிலையங்கள் ஆகியவை சம்பந்தப்பட்டவரையில், வர்த்தக ஐயப்பாடுகளும், இறக்குமதிக் கட்டுப்பாடுகளும், சில சமயங்களில் வேலையாட்கள் விலக்கப்பட்டமையும், நீண்டகால முதலீடுகளை நிலைபெயர்த்துத் தவணைவைப்புகளாக்குவதற்குக் கூடுதலான திரவநிலைமனப்பான்மையை உண்டு பண்ணியிருக்கக்கூடும். காப்புறுதிக் கூட்டுநிலையங்கள் சம்பந்தப்பட்டவரையில், 1962ம் ஆண்டு தை மாதம் 1-ம் திகதி தொடக்கம் தனிப்பட்டோர் துறையிலுள்ள கூட்டுநிலையங்கள் புதிய ஆயுட்காப்புறுதித் தொழில் நடத்துதலை நிறுத்திக் கொண்டன. அதே திகதியிற் தொழிற்படத் தொடங்கிய அரசாங்கக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், தனது பொறுப்புகளுக்கேற்ற அளவுள்ள திரவமான ஒதுக்குநிதிகளையும், தொழிற்படு முதலையும் திரட்டி வைத்திருக்க வேண்டிய தேவை ஏற்பட்டமையால், இத்துறையிலிருந்து முன்பு அரசாங்கத்திற்குச் சுரந்துகொண்டிருந்த அளவுடைய நிதிகளைத் தந்துதவ முடியாமற் போயிற்று. எனவே இத்துறையிலிருந்து சுரந்துகொண்டிருந்த நிதிகளில் ஒரு தற்காலிகமான வீழ்ச்சி ஏற்படுவது, தடுக்கமுடியாத விடயமாகும். இவ்வாண்டின் முற்பகுதியில் வேலைநிறுத்தங்கள் நடந்த பொழுது வங்கிக் கொடுகடன் வசதிகள் தற்காலிகமாகத் தடைப்பட்டு இருந்தமையும், அரசாங்கப் பத்திரங்களுக்குக் கிடைத்த ஆதரவு குறைவதற்குத் துணைக் காரணமாக விளங்கியிருக்கக்கூடும்.

நிர்வாகக் கடன்பாடுகளுக்கு முக்கிய மூலாதாரங்களாவன, இடைப்போக்கில் உள்ள காசுக் கட்டளை நிதிகளும் (ரூபா 179 இலட்சம்), இலங்கைப் போக்குவரத்துச் சபையும் (ரூபா 220 இலட்சம்), ஏனைய அரசாங்க முகவர் நிலையங்களும் (ரூபா 508 இலட்சம்), ஆகும்.

**பொதுப்படுகடன் (1)**

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் ஏற்பட்ட பொதுப்படுகடன் சம்பந்தமான விபரங்கள், பின்ணிணைப்பு II-ல் உள்ள 23-ம் அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளன. கடந்த ஐந்து நிதியாண்டுகளின் ஒவ்வொரு ஆண்டு முடிவிலும் இருந்த மொத்தப் பொதுப்படுகடன் தொகைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை II எ-7**

**மொத்தப் பொதுப்படுகடன்**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| புரட்டாதி முடிவில் | மொத்தம் | நிகர (ஆழ்நிதியின் பெறுமானம் நீக்கி) |
|---|---|---|
| 1958 | 1,495·4 | 1,212·1 |
| 1959 | 1,837·0 | 1,524·7 |
| 1960 | 2,230·4 | 1,912·8 |
| 1961 | 2,651·0 | 2,332·7 |
| 1962 | 3,037·8 | 2,686·1 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

(1) 1962-ம் ஆண்டு புரட்டாதி முடிவில் உள்ளபடி, இந்தப் பொதுப்படுகடன் எண்தொகைகளில் ரூபா 700 இலட்சம் கொண்ட தேசிய வீடமைப்புத் தொகுதிக் கடன் முறிகளும், ரூபா 458 இலட்சம் கொண்ட தேசிய ஈட்டு வங்கித் தொகுதிக் கடன் முறிகளும், நீக்கப்பட்டுள்ளன.

1961-62ம் நிதி ஆண்டில் மொத்தக் கடன் ரூபா 3868 இலட்சத்தாலும் நிகரக் கடன் ரூபா 3534 இலட்சத்தாலும் அதிகரித்தன. 1960-61ம் நிதியாண்டில் இவ்வதிகரிப்புகள், முறையே, ரூபா 4206 இலட்சமாகவும், ரூபா 4199 இலட்சமாகவும் அமைந்தன. மொத்தக் கடனில் ஏற்பட்ட ரூபா 3868 இலட்சம் கொண்ட அதிகரிப்பு, ரூபாப் பிணைகளில் உண்டான 1187 இலட்சம் ரூபா உயர்ச்சியையும், இறைசேரி உண்டியல்களில் உண்டான 2500 இலட்சம் ரூபா உயர்ச்சியையும், வரி ஒதுக்குநிதிப் பத்திரங்களில் உண்டான 19 இலட்சம் ரூபா உயர்ச்சியையும், அந்நிய கடன்களில் உண்டான 371 இலட்சம் ரூபா உயர்ச்சியையும், கொண்டிருந்தது. மகாவங்கியிலிருந்து பெற்ற முற்பணத்தில், ரூபா 209 இலட்சம் திருப்பிக் கொடுக்கப்பட்டது.

**ரூபாப் பிணைகள்:**—பின்வரும் அட்டவணை, கடந்த ஐந்து வருடங்களிற் திரட்டப்பட்ட கடன்களினதும், தீர்க்கப்பட்ட கடன்களினதும் தொகைகளைக் காட்டுகின்றது.

**அட்டவணை II எ-8**

ரூபாய்களில்

| நிதி ஆண்டு | திரட்டப்பட்ட கடன் | திருப்பிக் கொடுக்கப்பட்ட கடன் |
|---|---|---|
| 1957–58 .. .. .. .. .. .. | 79,474,400 | 56,143,700 |
| 1958–59 .. .. .. .. .. .. | 120,416,800 | 35,025,200 |
| 1959–60 .. .. .. .. .. .. | 195,000,000 | 55,239,200 |
| 1960–61 .. .. .. .. .. .. | 269,583,200 | 89,748,800 |
| 1961–62 .. .. .. .. .. .. | 193,699,600 | 75,000,000 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

1961-62ம் நிதியாண்டில் வெளியிடப்பட்ட ரூபாப் பிணைகளின் எண்ணிக்கை, பத்து ஆகும். 3¼ சதவீத வட்டிக்குரிய 1965/67க் கடனும், 3½ சதவீத வட்டிக்குரிய 1967-72 கடனும், 4¼ சதவீத வட்டிக்குரிய 1983-87 "பீ" தொடர் கடனும், இவ்வருடத்தில் முற்றுப் பெறுகின்ற 2½ சதவீத வட்டிக்குரிய ரூபா 487 இலட்சம் கொண்ட, 1960-62க் கடனை, மாற்றுதல் முறையாக வெளியிட்டன. இம்மூன்று கடன்களினதும் பங்குமுறிகளுக்கு முதல் இறுக்கும் வகையில், முற்றுப் பெறும் கடனின் பங்குமுறிகளில், ரூபா 417 இலட்சம் பெறுமானமுள்ள பங்குமுறிகள் தரப்பட்டன. எஞ்சிய ரூபா 70 இலட்சமும் பணமாகத் தரப்பட்டது.

பணத்திற்காக மட்டும் வெளியிடப்பட்ட இதர ஏழுகடன்களாவன:—

1961 ஐப்பசியில் வெளியிடப்பட்ட 4¼ சதவீத வட்டிக்குரிய 1982-86 "ஜீ" தொடர் கடன், 1961 மார்கழியில் வெளியிடப்பட்ட 4¼ சதவீத வட்டிக்குரிய 1982-86 "எச்" தொடர் கடன், 1962 மாசியில் வெளியிடப்பட்ட 4¼ சதவீத வட்டிக்குரிய 1983-87 கடன், 1962 வைகாசியில் வெளியிடப்பட்ட 4¼ சதவீத வட்டிக்குரிய 1983-87 "ஸி" தொடர் கடன், 1962 ஆனி/ஆடியில் வெளியிடப்பட்ட 4¼ சதவீத வட்டிக்குரிய 1983-87 "டி" தொடர் கடன், 1962 ஆவணி/புரட்டாதியில் வெளியிடப்பட்ட 4¼ சதவீத வட்டிக்குரிய 1983-87 "இ" தொடர் கடன், 3¼ சதவீத வட்டிக்குரிய 1965-67 "பீ" தொடர்கடன் முதலியன ஆகும். இந்த வெளியீடுகள் அனைத்தினதும் மொத்தத் தொகையான ரூபா 1937 இலட்சமும் முற்றாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இக்கடன்களுக்கான பணம் எந்தெந்த மூலாதாரங்களிலிருந்து பெறப்பட்டது என்ற விபரங்கள், அட்டவணை II எ-9ற் கொடுக்கப்பட்டுள்ளன.

## அட்டவணை II எ-9

### அரசாங்கப் பிணைகளில் செய்யப்பட்ட ஒதுக்கல்களின் பாகுபாடு

பத்து இலட்சம் ரூபாய்கள்

| | 4¼% கடன், 1982–86 'எ' தொடர் | 4¼% கடன், 1982–86 'ஏ' தொடர் | 4¼% கடன், 1983–87 | 3¼% கடன், 1965-67† | | 3½% கடன் 1967-72† | | 4¼% கடன் 1983-87 'B' தொடர்† | | 4¼% கடன் 1983–87 'ஸி' தொடர் | 4¼% கடன் 1983–87 'டி' தொடர் | 3¼% கடன் 1965–67 'பி' தொடர் | 4¼% கடன் 1983–87 'ஈ' தொடர் | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | திருப்பிச் செய்யப்பட்ட முதலீடுகள்* | பணம் | திருப்பிச் செய்யப்பட்ட முதலீடுகள்* | பணம் | திருப்பிச் செய்யப்பட்ட முதலீடுகள்* | பணம் | | | | | தொகை | % |
| வர்த்தக வங்கிகள் .. .. | — | — | — | 19·6 | 5·3 | 14·9 | 0·1 | — | — | — | — | 23·3 | — | 63·2 | 32·6 |
| கூட்டுறவு மாகாண வங்கிகள் .. | 0·1 | 0·3 | — | — | — | — | — | — | — | — | — | — | 0·2 | 0·6 | 0·3 |
| சேமிப்பு நிலையங்கள் .. .. | 1·3 | 3·6 | 0·3 | — | — | — | — | 1·1 | — | 2·3 | 4·0 | — | 1·4 | 14·0 | 7·2 |
| ஆழ் நிதிகள் .. .. .. | 4·9 | 5·3 | 6·2 | — | — | — | — | — | — | — | — | — | — | 16·4 | 8·5 |
| திணைக்கள நிதிகளும், ஏனைய அரசகரும நிதிகளும் .. .. .. | 1·3 | 2·2 | ... | — | — | — | — | 0·9 | — | 0·5 | 1·1 | — | — | 6·0 | 3·1 |
| நம்பிக்கைச் சொத்துகளும், சேமநிதிகளும், உபகாரச் சம்பள நிதிகளும்:— | | | | | | | | | | | | | | | |
| (அ) ஊழியர் சேமநிதி .. .. | 6·0 | 8·5 | 7·9 | — | — | — | — | — | 0·3 | 15·0 | 10·6 | — | 5·7 | 54·0 | 27·9 |
| (ஆ) ஏனையவை .. .. | 5·6 | 4·5 | 4·1 | 0·4 | — | 0·1 | ... | 1·7 | 0·2 | 1·8 | 2·8 | 2·6 | 2·9 | 26·7 | 13·8 |
| காப்புறுதிக் கூட்டு நிலையங்கள் .. | 0·6 | 0·6 | 1·5 | 0·9 | 0·3 | ... | 1·4 | — | — | 0·3 | 1·4 | 1·8 | 1·5 | 10·3 | 5·3 |
| இதர கூட்டு நிலையங்கள் .. .. | — | — | — | 0·1 | — | — | — | — | — | — | — | 0·1 | ... | 0·2 | 0·1 |
| தனியாட்களும், சங்கங்களும், நிலையங்களும் .. .. .. | 0·2 | 0·2 | 0·1 | 0·1 | ... | — | — | 1·4 | — | 0·1 | 0·1 | ... | 0·5 | 2·7 | 1·4 |
| மொத்தம் .. | 20·0 | 25·0 | 20·0 | 21·0 | 5·6 | 15·0 | 1·5 | 5·1 | 0·5 | 20·0 | 20.0 | 27·9 | 12·1 | 193·7 | 100·0 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

*முதிர்வு பெற்ற 2½% வட்டி கொண்ட 1960–62 கடன் பிணைகளைக் கொடுத்து, புதிய கடன்களிற் செய்யப்பட்ட முதலீடுகள்.
†புதுப்பித்து மாற்றிய கடன்கள்

**இறைசேரி உண்டியல்கள்:**—அண்மையில் உள்ள நிதியாண்டுகளைப் போலவே 1961-62ம் ஆண்டிலும், பொதுப்படுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பில் இறைசேரி உண்டியல்களில் ஏற்பட்ட அதிகரிப்பே, ஆகப் பெரிய பங்கு உடையதாக அமைந்தது. நிலுவையில் நின்ற இறைசேரி உண்டியல்களின் அளவு, 1961ம் ஆண்டு புரட்டாதி முடிவுக்குரிய ரூபா 7500 இலட்சத்திலிருந்து, 1962ம் ஆண்டு புரட்டாதி முடிவில் ரூபா 10000 இலட்சத்திற்கு அதிகரித்தது. இவ்வதிகரிப்பின் பெரும்பகுதியான தொகையை மகாவங்கி ஏற்றுக்கொண்டது. 1961ம் ஆண்டு புரட்டாதி முடிவில் ரூபா 6800 இலட்சமாக இருந்த மகாவங்கியின் இறைசேரி உண்டியல் உடமைகள், 1962ம் ஆண்டு புரட்டாதி முடிவில் ரூபா 8644 இலட்சமாக உயர்ந்துள்ளன.

1961-62ம் நிதியாண்டின் போது இறைசேரி உண்டியல்களின் சட்டபூர்வமான எல்லை, 1961ம் ஆண்டு மார்கழி மாதம் 14ம் திகதி, பாராளுமன்றத்தின் பிரேரணையால், ரூபா 7500 இலட்சத்திலிருந்து ரூபா 10,000 இலட்சத்திற்கு உயர்த்தப்பட்டது.

**அந்நிய கடன்:**—மொத்த அந்நிய கடன்கள் ரூபா 376 இலட்சத்தால் அதிகரித்தமை, அந்நிய கடன் ஒப்பந்தங்களின்கீட் பெறப்பட்ட ரூபா 445 இலட்சத்திற்கு எதிராக, ரூபா 39 இலட்சம் கொண்ட சர்வதேச புனருத்தாரண அபிவிருத்தி வங்கிக் கடனும், ரூபா 10 இலட்சம் கொண்ட சீனக் கடனும், ரூபா 13 இலட்சம் கொண்ட கனடிய கடன்களும், ரூபா 7 இலட்சம் கொண்ட அபிவிருத்திக் கடன் நிதித்தாபனக் கடன்களும் திருப்பிக் கொடுக்கப்பட்டமையின் இணைந்த நிகர விளைவாகும். மொத்த அந்நிய கடன்களை மூலாதாரப் பிரிவுகளின்படி அட்டவணை II எ-10 காட்டுகின்றது.

**அட்டவணை II எ-10**

**அந்நிய கடன்கள்**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1961–62ல் ஏற்பட்ட நிகர அதிகரிப்பு | 1962 புரட்டாதி 30ல் வெளி நின்ற தொகை |
|---|---|---|
| சர்வதேச புனருத்தாரண அபிவிருத்தி வங்கி .. .. | 25·6 | 102·1 |
| சர்வதேச கூட்டுதவி ஆட்சித்தாபனம் (ஐக்கிய அமெரிக்க) .. | —1·3 | 8·4 |
| அபிவிருத்திக் கடனுதவி நிதித்தாபனம் (ஐக்கிய அமெரிக்க) .. | —1·0 | 9·3 |
| ரூசியா .. .. .. | 3·3 | 3·3 |
| பிரித்தானிய ஸ்டேர்லிங் பிணைகள் .. .. | — | 167·9 |
| பிரித்தானிய கொடுகடன் வசதி .. .. | 3·9 | 13·3 |
| சீனக் கடன் .. .. .. | 3·7 | 31·7 |
| கனடிய கடன் .. .. .. | 3·4 | 8·8 |
| | 37·6 | 344·8 |

மூலம்: இலங்கை மகா வங்கி

**ஆழ்நிதிகள்:**—பொதுப்படுகடன்களை மீட்பதற்காக உள்ள ஆழ்நிதிகளின் பெறுமானம், 1961-62ம் நிதியாண்டின் இறுதியில் ரூபா 3518 இலட்சமாக இருந்தது. 1960-61ம் ஆண்டின் இறுதிக்குரிய தொகையுடன் ஒப்பிடுகையில், இது, ரூபா 335 இலட்சம் கொண்ட அதிகரிப்பைக் காட்டுகின்றது. 1962ம் ஆண்டு முதிர்வடைந்த $2\frac{1}{2}$ சதவீத வட்டிக்குரிய 1960-62 தேசிய அபிவிருத்திக் கடனைத்

திருப்பிக் கொடுப்பதற்காக ரூபா 263 இலட்சம் கொண்ட ஒரு தொகை, ஆழ்நிதியிலிருந்து எடுக்கப்பட்டது. இவ்வாண்டில், வரவு செலவுத்திட்டத்திலிருந்து ஆழ்நிதிக்கு உதவிய தொகை ரூபா 379 இலட்சமாகவும், ஆழ்நிதிகளின் முதலீடுகளிலிருந்து சம்பாதிக்கப்பட்ட வட்டி ரூபா 120 இலட்சமாகவும், அமைந்தன. ஆழ்நிதிகளின் உடமைகளான முதலீடுகளின் சந்தைப் பெறுமானம், ரூபா 98 இலட்சம் கொண்ட ஓர் அதிகரிப்பைக் காட்டுகின்றது.

**அரசாங்க ஆதிக்கமுள்ள நிலையங்களின் கடன்பாடு:**—1961-62ற் தேசிய வீடமைப்புத் தொகுதிக்கடன்முறிகள் ஒன்றும் வெளியிடப்படவில்லை. ஆனல் இவ்வருடம் அரசாங்கம் ரூபா 100 இலட்சம் கொண்ட ஒரு நேரடிக்கடனைத் தேசிய வீடமைப்பு ஆணையாளருக்கு வழங்கியது. எனவே, தேசிய வீடமைப்பு ஆணையாளருக்கு அரசாங்கம் இதுவரை வழங்கிய நேரடிக்கடன்களின் மொத்தம், ரூபா 400 இலட்சமாயிற்று. வெளிநின்ற தேசிய வீடமைப்புத் தொகுதிக்கடன் முறிகளின் மொத்தத் தொகை ரூபா 700 இலட்சமாகவே தங்கிநின்றது. தேசிய வீடமைப்புத் தொகுதிக்கடன்முறிகளை மீழ்வதற்காக ஏற்படுத்தப்பட்ட ஆழ்நிதிகளின் உண்மையான சந்தைப் பெறுமானம் இந் நிதியாண்டின் முடிவில், ரூபா 155 இலட்சமாக இருந்தது.

1961-62ம் ஆண்டிற் தேசிய ஈட்டு வங்கித்தொகுதிக்கடன்முறிகள் ஒன்றும் வெளியிடப்படவில்லை. தனது தொழிற்பாடுகளை நடாத்துவதற்காக இவ்வங்கி தொடர்ந்தும் வர்த்தக வங்கிகளிலிருந்து கிடைக்கக்கூடிய மேலதிகப் பற்று வசதிகளை நாடியது. 1960-61ம் ஆண்டில் இவ்வங்கி பெறக்கூடிய மொத்தக் கடன்களின் வரையறுக்கப்பட்ட எல்லை, ரூபா 600 இலட்சமாக இருந்தது. தேசிய ஈட்டுவங்கி அதிகாரச் சட்டத்தின் 35-ம் பிரிவின் கீழ், நிதியமைச்சர் இவ்வெல்லையை, 1962ம் ஆண்டு பங்குனி மாதத்தில் ரூபா 650 இலட்சத்திற்கு உயர்த்தினர். 1962ம் ஆண்டு புரட்டாதி 30-ம் திகதியில் உள்ளபடி, இவ்வங்கியின் தொகுதிக்கடன்முறி நிலுவைகளின் மொத்தம் ரூபா 458 இலட்சமாகவும், உத்தரவாதமளிக்கப்பட்ட மேலதிகப் பற்றுக்களின் நிலுவை மொத்தம் 93 இலட்சமாகவும் இருந்தன.

## 1962-63க்கான வரவு செலவுத்திட்டம்

பாராளுமன்றத்தினல் அங்கீகரிக்கப்பட்டபடி, 1962-63ம் ஆண்டிற்கான வரவு செலவுகளின் மூலமதிப்பீடுகள் பின்வருமாறு:—

### அட்டவணை II எ-11

### 1962-63ம் ஆண்டிற்கான மூல வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | |
|---|---|
| மீண்டுவரும் செலவு (வாக்குப் பணங்கள் 1,2,4,6 ஆகியன) | 1706·9 |
| மூலதனச் செலவு (வாக்குப் பணங்கள் 3,5,7 ஆகியன) | 473·3 |
| மொத்தச் செலவு | 2180·2 |
| அரசிறை | –1716·9 |
| வரவு செலவுத்திட்டக்குறை | 463·3 |
| ஆழ்நிதிக்கு உதவிய தொகையும், நேரடியாகத் திருப்பிக் கொடுக்கப்பட்ட பொதுப்படு கடனும் நீக்கி | 50·0 |
| மதிப்பிடப்பட்ட நிகரப் பணக்குறை | 413·3 |

மூலம்: இலங்கை மகா வங்கி.

வரவு செலவுத்திட்டத்திற் காணப்பட்ட ரூபா 4633 இலட்சம் கொண்ட பணக்குறையை நிவர்த்திப்பதற்கு நிதியமைச்சர் அறிவித்த நிதி ஆதாரங்களாவன, உள்நாட்டுச் சந்தைக்கடன்பாடுகளிலிருந்து ரூபா 1800 இலட்சமும், அந்நிய உதவிகளிலிருந்து ரூபா 1500 இலட்சமும், ஆகும். எனவே, நிதியீட்டப்படாத குறை ரூபா 1333 இலட்சமாக உள்ளது.

வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்ட இரண்டு வழிவகைகள், அதாவது ரூபா 900 இலட்சம் கிடைக்கும் என மதிப்பிடப்பட்ட விற்பனை வரியும், உணவு மான்னியச் செலவில் ரூபா 255 இலட்சம் சேமிக்கப்படும் என மதிப்பிடப்பட்டு, ஒரு ஆளுக்கு ஒரு இருத்தல் விகிதம் பங்கீட்டரிசியைக் குறைக்கும் உத்தேசமும், பின்னர் கைவிடப்பட்டன. விற்பனை வரிக்குப் பதிலாகப் பலதரப்பட்ட இறக்குமதிகளின்மேலுள்ள இறக்குமதித் தீர்வை விகிதங்கள் 20 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டன. இவ் உயர்ந்த தீர்வைகளின் பயனாக ரூபா 500 இலட்சம் கொண்ட அரசிறை கிடைக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

பின்னர், 1963ம் ஆண்டு மாசி 21-ம் திகதி ஜனப்பிரதிநிதிகள் சபையில் நிதியமைச்சர் நிகழ்த்திய பேச்சில், சில புதிய நிதி நடவடிக்கைகள் குறிப்பிடப்பட்டிருந்தன. இப்புதிய நடவடிக்கைகள் பின்வருமாறு:—

(அ) நெல் உற்பத்தியாளரிடமிருந்து பங்கீட்டு அரிசிக் கூப்பன்களைத் திருப்பிப் பெறுதல்மூலம் உத்தேசமாகக் கிடைக்கத்தக்க ரூபா 400 இலட்சம்;

(ஆ) மாலைதீவு மாசிக்கருவாட்டின்பேரில் உள்ள மான்னியத்தை ரத்துச் செய்வதன்மூலம் உத்தேசமாகக் கிடைக்கத்தக்க ரூபா 50 இலட்சம்;

(இ) இறக்குமதி உத்தரவுச் சீட்டுக்களின் பேரில் ஒரு சதவீதமான கூலி விதிப்பதன் மூலம் உத்தேசமாகக் கிடைக்கத்தக்க ரூபா 60 இலட்சம்;

(ஈ) உணவு ஆணையாளரின் திணைக்களத்தாற் கையாளப்படவேண்டிய ஏனைய பொருளாதார சிக்கனங்களின் மூலம் உத்தேசமாகக் கிடைக்கத்தக்க ரூபா 100 இலட்சம்.

உணவு ஆணையாளரின் திணைக்களத்தாற் கையாளப்பட்ட சிக்கனங்கள் பின்வருமாறு:—

(அ) சில மாகாணங்களிற் பங்கீட்டு அரிசிக்குப் பதிலாக நெல் விநியோகித்தல்;

(ஆ) இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள பங்கீட்டரிசி விற்பனை விலையை, கொழும்பிலிருந்து ஏற்றி இறக்கற் சுமைகூலிகளும் உட்படும்படியாக, மாற்றியமைத்தல்.

நெல் உற்பத்தியாளரிடமிருந்து பங்கீட்டு அரிசிக்கூப்பன்களைத் திருப்பிப் பெறும் திட்டம் ரத்துச் செய்யப்பட்டதென, 1963ம் ஆண்டு பங்குனி 8-ம் திகதி, ஜனப்பிரதிநிதிகள் சபையில் வர்த்தக அமைச்சர், அறிவித்துள்ளார்.

1963ம் ஆண்டு மாசி 15-ம் திகதி முதல் சீனியின் விற்பனை விலையும் இருத்தலுக்கு 5 சதத்தால் அதிகரிக்கப்பட்டது. இதனால் கிடைக்கக்கூடிய அதிகரித்த இலாபத்தை ஈடுசெய்து சீனியின் இறக்குமதி விலை அதிகரித்துள்ளமையால், இந்நடவடிக்கையின் பயனாக உணவு மான்னியச் செலவுத்தொகையில் மாற்றம் எதுவும் ஏற்படுமென எதிர்பார்க்கப்படவில்லை.

**அரசிறை**

1962-63ம் ஆண்டிற்கான அரசிறையின் மூலமதிப்பீடாகிய ரூபா 17169 இலட்சம், 1961-62ம் ஆண்டில் உள்ளபடியாகக் கிடைத்துள்ள அரசிறையிலும் பார்க்க ரூபா 916 இலட்சம் கூடுதலானதாக அமைந்த தோடு, வரவு செலவுத்திட்டத்திற் புகுத்தப்பட்ட புதிய வரிகளிஞற் கிடைக்கும் என மதிப்பிடப்பட்ட ரூபா 945 இலட்சத்தையும் கொண்டுள்ள தாகும்.

புதிய வரிகளிலிருந்து கிடைக்குமென மதிப்பிட்ட ரூபா 945 இலட் சத்தில், ரூபா 773 இலட்சம் கொண்ட தொகை உயர்ந்த இறக்குமதித் தீர்வைகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது. நடைமுறையிலிருந்த இறக்கு மதித் தீர்வைகளின் மேல் விதிக்கப்பட்ட பொதுவான 20 சதவீத அதிகரிப் பைத்தவிர, பல இறக்குமதிப் பொருட்களின்மேல், முக்கியமாக, சீமெந்து, சிலவித ஆடைவகைகள், மண்எண்ணே, வாஞெலிபெட்டிகளுக்கான உப பகுதிகள், முட்டைகள், பழச்சாறுகள், இரும்பு, எஃகு ஆகிய பொருட்கள், எழுத்துக்கும், அச்சடிப்பதற்கும் உரிய (பத்திரிகைக்கல்லாத) காகிதங்கள், ''பியர்'', போகமான உணவுகள், ஆகியனவற்றின்மேல் உயர்ந்த தீர்வைகள் வரவு செலவுத்திட்டத்திஞல் அறிவிக்கப்பட்டது.

ஏனைய நடவடிக்கைகளுள், வருமான வரியின்மீது 15 சதவீதமாக உள்ள மேலதிக அறவீடு 20 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டதிலிருந்து ரூபா 100 இலட்சம் கிடைக்கும் எனவும், இதுவரை உள்நாட்டு வரிகளுக்கு உட்படாத சில பொருட்களின் மீது உள்நாட்டுவரி விதிக்கப்பட்டமையிலிருந்து ரூபா 56 இலட்சம் கிடைக்குமெனவும், மோட்டோர் போக்குவரத்து அதிகாரச் சட்டத்தின்கீழ் வழங்கப்படும் உத்தரவுச்சீட்டுக்கூலி அதிகரிக்கப்பட்டமை யிலிருந்து ரூபா 10 இலட்சம் கிடைக்குமெனவும், மதிப்பிடப்பட்டுள்ளன.

**நேரடி வரிமுறை திருத்தி அமைக்கப்பட்டமை**

நேரடி வரிமுறையைத் திருத்தி அமைப்பதற்கான திட்டம் ஒன்றை வரவு செலவுத்திட்டப் பேச்சோடு நிதியமைச்சர் அறிவித்தார். இப்புதிய முறை, 1963ம் ஆண்டு சித்திரை மாதம் 1-ம் திகதி முதலாக உள்ள வருமான வரிக் கணிப்பு வருடத்திலிருந்து நடைமுறைக்கு வரத்தக்கது. இப்புதிய முறையின்கீழ், ஆக நாலு நேரடி வரிகள் மட்டும் உள்ளன. அவையாவன:— வருமானவரி, செல்வவரி, நன்கொடைவரி, தோட்டவரி, ஆகியனவாகும். பின்வரும் வரிகள்—அதாவது சொந்தச்செலவுவரி, காணிவரி, தேசிய அபி விருத்தி வரி, உயர் தொழில் வர்த்தகங்கள் பதிவு செய்தல் வரி, அரிசி மான்யவரி, மேலதிகவரி, வருமானவரியின் மீதுள்ள மேலதிக அறவீடு ஆகியன, நீக்கப்படும். முந்தைய வருமானவரி முறையின்கீழ் 5 சதவீதத்திலிருந்து 60 சதவீதம்வரை படிப்படியாக உயர்ந்து செல்லும் வரிவிகிதங்களுக்குப் பதிலாக, புதிய முறையின் கீழ் உள்ள விரிவிகிதங்கள் கூர்மையான வகை யில், 15 சதவீதத்திலிருந்து 80 சதவீதம்வரை உயர்ந்து செல்லும். அத்துடன் மனேவி, பிள்ளேகள் ஆகியோருக்குரிய வரியில்லா அனுமதித்தொகைகளும், ஒவ்வொரு வரிவிகிதத்திற்கும் இலக்கான பிரமாணத் தொகைகளும், குறைக் கப்பட்டுள்ளன. இப்புதிய திட்டத்தின் பயஞக, வரிமுறைகளேச் செயல் நடத்துதல் குறிப்பிடத்தக்க அளவாற் சுலபமாகுமென எதிர்ப்பார்க்கப்படு கின்றதெனினும், நேரடி வரிகளிலிருந்து கிடைக்கும் மொத்த அரசிறை மாற்றமடையும் என எதிர்பார்க்கப்படவில்லே.

கூட்டுநிலேயங்கள் சம்பந்தப்பட்டவரையில், 33⅓ சதவீதமான திருப்பிக் கொடுக்கத்தக்கவரி (பங்கு இலாப வரி) மாற்றமின்றி இருக்கும். ஆஞற் திருப்பிக் கொடுத்தல் நியதியற்ற 45 சதவீத வருமானவரி, வருமான

வரியின்மேல் உள்ள மேலதிக அறவீடு, காணிவரி, கூட்டுநிலையவரி, ஆகியன வற்றிற்குப் பதிலாக, 57 சதவீதமான திருப்பிக் கொடுத்தல் நியதியற்ற வரி விதிக்கப்படும். இலங்கையில் வதிவற்ற கூட்டுநிலையங்களின்மேல், இதுகாறும் உள்ளது போலவே, மேலதிகமாக 6 சதவீதவரி விதிக்கப்படும்.

உற்பத்தியை விளைவிக்கத்தக்க முதலீடுகளை உற்சாகப்படுத்தும் நோக்கத்தோடு, அரசாங்கத்தினுல் அனுமதிக்கப்பட்ட புதிய கைத்தொழில்களிலும், அரசாங்கக் கடன்களிலும் செய்யப்பட்ட முதலீடுகளின் பேரில், வருமான வரிச் சலுகைகள் அனுமதிக்கப்படும். ஒரு தனியாளுக்கென அனுமதிக்கத்தக்க ஆகக்கூடிய சலுகை ரூபா 25,000 ஆகவும், சலுகை அனுமதிக்கப்பட்ட முதலீடு, தனியாளின் முழுவருமானத்தில் ஐந்தில் ஒரு பங்கிற்கு மேற்படாமலும் இருக்கத்தக்கது. தோட்டத்தொழில்களுக்கு ஓரளவு சலுகை அளிக்கும் நோக்கத்தோடு, அவற்றிற்கு மேலும் 40 சதவீத அபிவிருத்திச் சலுகை அளிப்பதற்காக, அவற்றை, ''அனுமதிக்கப்பட்ட திட்டங்கள்'' என வகுக்கப்படும். எனவே, பொறிகள், இயந்திரங்கள், தொழிலாளர்களின் குடியிருப்புக்கான கட்டடங்கள், பொது நலக் கட்டடங்கள் ஆகியவை பின்வரும் விகிதங்கள் கொண்ட ஒரேயடியான சலுகை அனுமதிகளைப் பெறுவதற்குத் தகுதியுடையனவாகின்றன.

| | |
|---|---|
| பொறிகளும், இயந்திரங்களும் .. .. | 106 2/3% |
| தொழிலாளர்களுக்கும், பொது நலன்களுக்குமான கட்டடங்கள் | 73 1/3% |

## நடைமுறைச் செலவு

மீண்டுவரும் செலவுக்கான வாக்குப்பணங்களின் (அதாவது வாக்குப் பணங்கள் 1,2,4,6 ஆகியவற்றின்) மொத்தத் தொகை ரூபா 17069 இலட்சமாகும். இதில் மூலதனச் செலவுத்தன்மை உடைய விடயங்களையும், ஆழ்நிதிக்கு உதவுவதற்கான மதிப்பீட்டுத் தொகைகளையும், கழித்தபின் எஞ்சிய நடைமுறைச் செலவுத் தொகை, ரூபா 15854 இலட்சமாக உள்ளது. இத்தொகை, 1961-62ம் ஆண்டில் உண்மையாக ஏற்பட்ட நடைமுறைச் செலவிலும் பார்க்க ரூபா 900 இலட்சம் கூடியதாகும். இவ்வதிகரிப்பு, முக்கியமாகப் பொதுப்படுகடன் வட்டி, இளைப்பாறற் சம்பளம், சுகாதாரம், கல்வி, பாதுகாப்பு, பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றிற்கெனக் கூடுதலான தொகைகள் ஒதுக்கப்பட்டமையின் பயனுக, ஏற்பட்டது.

## மூலதனச் செலவு

மூலதனச் செலவுக்கான மூலமதிப்பீடுகள் (அதாவது 3,5,7 ஆகிய வாக்குப்பணங்களின் மொத்தம்) ரூபா 4733 இலட்சமாகும். இத்தொகையுடன், மீண்டுவரும் செலவுக்கான வாக்குப்பணங்களின் கீழ் உள்ள மூலதனச் செலவு விடயங்களையும், வரவு செலவுத்திட்டத்திற்கு அப்பாற்பட்ட ஒதுக்கு நிதிகளிலிருந்து அறவிடத்தக்க மூலதனச் செலவுகளையும் சேர்த்தபின், மொத்த மூலதனச் செலவு ரூபா 5703 இலட்சமாக உள்ளது. இத்தொகை, 1961-62ம் ஆண்டில் உண்மையாக ஏற்பட்ட செலவிலும் பார்க்க ரூபா 257 இலட்சம் குறைவானதாகும். இவ்வீழ்ச்சி முக்கியமாக, இலங்கைப் போக்குவரத்துச்சபை, துறைமுக (கப்பற் சரக்குக்) கூட்டுத்தாபனம் ஆகிய அரசாங்க முகவர் நிலையங்களுக்குக் கடன்களாகக் குறைவான தொகைகள் வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டமையின் பயனுக, ஏற்பட்டது.

அந்நிய உதவிகளிலிருந்து கிடைக்குமென எதிர்பார்க்கப்பட்ட ரூபா 1500 இலட்சத்தில், ரூபா 1225 இலட்சம் கொண்ட தொகை, விபரமான திட்டங்கள் சம்பந்தமாக ஒதுக்கப்பட்டுள்ளது. இவற்றில் ஆகப்பெரிய விடய மாக, சர்வதேச புனருத்தாரண அபிவிருத்தி வங்கிக்கடனிலிருந்து, மின் சாரத்திட்டத்திற்கான ரூபா 405 இலட்சம் கொண்ட தொகை, அமைந் துள்ளது. ஏனைய முக்கியமான ஒதுக்கங்கள், ரூசியா, சீனு, அமெரிக்கா, கனடா, பிரிட்டன், மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகளின் உதவி சம்பந்தமான வையாகும். ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையில், ரூபா 933 இலட்சம் கொண்ட தொகை கடன்களாகவும், ரூபா 292 இலட்சம் கொண்ட தொகை, நன்கொடைகளாகவும் உள்ளன.

இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்க உதவி, ஐக்கிய அமெரிக்காவின் ''அந்நிய உதவி அதிகாரச் சட்டத்தின்'' கீழ்த் தற்காலிகமாகத் தடுக்கப் பட்டுள்ளதென, 1963ம் ஆண்டு மாசி 8-ம் திகதி ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் அறிவித்தது. இம்முடிவின் பயனுகக் கட்டுநாயக்கா விமான நிலயத்திற்கான (அமெரிக்க) அபிவிருத்திக் கடன் நிதியின் டொலர்க் கடன் ரத்துச் செய்யப்படும். இக்கடனிலிருந்து 1962-63ம் ஆண்டிற்கென மதிப்பிடப் பட்ட செலவு ரூபா 38 இலட்சமாக உள்ளது. அமெரிக்க உதவி ரத்துச் செய்யப்பட்டமை, அமெரிக்க உதவியின் பயனுல் எழுந்த உள்நாட்டு நிதி களிலிருந்து விடுக்கப்பட்ட ரூபா நன்கொடைகளிலிருந்து, 1962-63ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட ரூபா 90 இலட்சம் கொண்ட தொகையைப் பாதிக்கமாட்டாது. ஐக்கிய அமெரிக்காவின் 480ம் பொதுச்சட்டத்தின்கீழ் இலங்கைக்குத் தரப்படும் கோதுமை மாவும், ''கெயர்'' திட்டத்தின்கீழ்த் தரப்படும் பாலும், அமெரிக்காவின் அந்நிய உதவி அதிகாரச்சட்டத்தின்கீழ் அமைவன அல்ல.

உள்நாட்டுச் சந்தைக்கடன்பாடுகளிலிருந்து கிடைக்குமென மதிப்பிடப் பட்ட ரூபா 1800 இலட்சம் கொண்ட தொகை, வங்கிகளல்லாத மூலாதாரங் களிலிருந்து 1960-61ம் ஆண்டிற் கடன்பட்ட ரூபா 1973 இலட்சத்துடனும், 1961-62ம் ஆண்டிற் கடன்பட்ட ரூபா 1473 இலட்சத்துடனும், ஒப்பிடத் தக்கதாக உள்ளது. 1962-63ம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் உள்நாட்டுச்சந்தைக் கடன்பாட்டிலிருந்து, ரூபா 1387 இலட்சம் பெறப் பட்டது. இத்தொகையில், ரூபா 905 இலட்சம் கொண்ட தொகை வங்கி களல்லாத மூலாதாரங்களிலிருந்து கிடைத்தது.